Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious Rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2862)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 18 செவ்வாய்க்கிழமை (02.07.2013) பக்கங்கள் 20 ஓசை - 275



அவதாரம்

08



அடுத்தது என்ன?

10




அதிர்ச்சி

11



துளிர்விடும் விதிமுறை

12



நீரில் குதித்தது

18

## வடக்கின் முன்னேற்ற செயற்றிட்டம் டக்ளஸ் கோரிக்கை; ஜனாதிபதி ஏற்பு



வடமாகாணத்தின் முன்னேற்றத்திற்கு பயனளிக்கும் வகையிலான செயற்றிட்டங்களை உருவாக்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த ஆலோசனைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். இதன்படி வடக்கில் நியமனம் பெறாமல் விடுபட்ட தொண்டர் ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், முன்பள்ளி

19 ஆம் பக்கம் பார்க்க

### தொண்டர் ஆசிரியர், சுகாதாரத் தொண்டர்

## நியமனம் கிடைக்காதோரை பதிவுசெய்ய வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இதுவரை நியமனம் கிடைக்கப்பெறாத தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் சுகாதார தொண்டர் ஆகியோர் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்பதாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றும் அனைவரையும் குறித்த திகதிக்கு முன்பதாக ஈழமக்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

# 13 ஆவது திருத்தம் குறித்து பேச பசிலை அழைக்கிறது இந்தியா

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை பலவீனப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்பாக கவலையடைந்துள்ள இந்தியா, இது தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவே அமைச்சர் பசில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு அழைத்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் ஆங்கில வாரஇதழ் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிவ்சங்கர் மேனன் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக, பசில் ராஜபக்ஷ மூலம் கடுமையான செய்தி ஒன்றை கொழும்புக்கு அனுப்பவே அவரை இந்திய அரசாங்கம் அழைத்துள்ளதாகப் புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் நடக்கவுள்ள பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்க இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வரவுள்ளார்.

அதற்கு முன்னதாக, நாளை மறுதினம் ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவராக, அமைச்சர் பசில் ராஜபக்ஷ இரண்டு நாள் பயணமாக புதுடில்லி செல்லவுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்பாக கவலையடைந்துள்ள இந்தியா, இது தொடர்பாக கலந்துரையாடவே பசில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு அழைத்துள்ளது.

புதுடில்லியில் பசில் ராஜ பக்ஷவை, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனும் சந்திக்கவே ஏற்பாடாகியுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## நிஷாந்தன் கைது



யாழ். மாநகர சபையின் முனாள் உறுப்பினர் சிறிகரன் நிஷாந்தனை கைதுசெய்துள்ளதாக யாழ். தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ். பிரதான வீதியிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில், விபசாரத்தில் ஈடுபட்டதாகக் கூறி யாழ். பிரதேச செயலர் மற்றும் நிஷாந்தன் ஆகியோர் சென்று ஜோடியொன்றை பிடித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக குறித்த விடுதி உரிமையாளர் தனது விடுதிக்குள், யாழ். பிரதேச செயலர் மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்

19 ஆம் பக்கம் பார்க்க

## குகநாதன் மீதான தாக்குதல் உதயனின் உள்முரண்பாடே காரணம்

### கூறுகிறார் றெமீடியஸ்

(யாழ்ப்பாணம்)

உதயன் பத்திரிகையின் செய்தியாசிரியர் குகநாதன் தாக்கப்பட்டமைக்கு அப்பத்திரிகை நிறுவனத்தில் காணப்பட்ட உள்முரண்பாடுகளே காரணம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான றெமீடியஸ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று மாலை அவர் நடாத்திய விசேட செய்தியாளர் மாநாட்டி




லேயே அவர் மேற்படி பரபரப்புத் தகவலை வெளியிட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக மாவை

### இலங்கை தமிழரசுக் கட்சி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவை நிறுத்துவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.கிளை ஆதரவாக தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.கிளை காரியாலயத்தில் நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தல் சம்பந்தமான கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் மேலும் இரண்டு தீர்மானங்களும

19 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவில் இணையாமைக்கு காரணம் கூறுகிறார் சுமந்திரன்

அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை மீறி செயற்பட்டு வருவதனாலேயே நாடாளுமன்றத் தேர்வுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபெறவில்லையென சுமந்திரன் எம்.பி. பி.பி.சி. யிடம் தெரிவித்தார். அரசுக்கும் எமக்கும் முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது,

19 ஆம் பக்கம் பார்க்க

## 13 மாற்றியமைக்கப்பட்டால் அரசிலிருந்து வெளியேறுவேன்

### அமைச்சர் வாசு எச்சரிக்கை

(கொழும்பு)

நடைமுறையிலுள்ள 13 ஆவது திருத்தச்சட்ட மூலம் மாற்றியமைக்கப்பட்டு மாகாண சபைமுறை ஒழிக்கப்படுமாக இருந்தால் அரசாங்கத்தைவிட்டு விலகப்போவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, மாகாண சபை அதிகாரங்கள் ஒருபோதும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை

19 ஆம் பக்கம் பார்க்க

5 ஆம் பக்கத்தில்
விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள்

# பிரசவ விடுதியை தரிசிக்க தவம் செய்யவேண்டிய அவலம்

## யாழ்.போதனா மருத்துவமனையில் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் பிரசவ விடுதிகளில் அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கு பாஸ் நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளதால் தூர பிரதேசங்களில் இருந்து வரும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நடைமுறை முன்னறிவித்தல் எதுவுமின்றி அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் வன்னி, தீவகப்பகுதி, வடமராட்சி, தென்மராட்சி போன்ற பிரதேசங்களில் இருந்து வரும் மக்கள் தமது உறவுகளை பார்க்கமுடியாது ஏக்கத்துடன் நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொரு பிரசவ விடுதிகயிலும் பாஸின் ஊடாக ஒவ்வொருவராகச் சென்று பார்வையிடுவதுடன், தமது உறவினர் பார்ப்பதற்காக ஒரு குடும்பத்திலிருந்து காவல் கடமையில் நிற்கும் உத்தியோகத்தர்களால் அனுமதிக்கப்படுவதாக மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக காவல் கடமையில் நிற்கும் உத்தியோகத்தரிடம் கேட்டபோது அண்மையில் பிரசவ விடுதியொன்றில் குழந்தை காணாமற்போனதாகவும், இதனை அடுத்தே இந்நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தூர பிரதேசங்களில் இருந்து வரும் மக்கள் பெரும்பாலும் நண்பகல் வேளை வருவதால் குறிப்பிட்ட ஒரு மணித்தியாலயத்திற்குள் தமது உறவினர்களை பார்வையிட முடியாது கவலையுடன் வீடு திரும்புவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தூர பிரதேங்களில் இருந்து வரும் மக்களின் அவல நிலையை கருத்திற்கொண்டு காத்திரமான நடவடிக்கையை வைத்தியசாலை நிர்வாகம் எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மாபெரும் சிரமதானம்



(வடமராட்சி)

வடமராட்சி வல்லை மகளிர் கல்லூரி மாணவர்களும், வல்வை இராணுவத்தினரும் இணைந்து கல்லூரிக்கு அருகாமையில் உள்ள மைதானத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணிகள் நேற்று இடம் பெற்றது.

இம்மைதானத்தில் குப்பைகள் கொட்டப்படும் நிலையில் வல்வெட்டித்துறை நகரசபையினால் இம்மைதானத்தை துப்புரவாக்கும் பணிகள் இடம் பெற்றுள்ளன. இப்பணியில் இராணுவத்தினரும், பாடசாலை மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் ஈடுபட்டனர்.

## திருச்சொருப பவனி

(ஆனைக்கோட்டை)

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் மடுமாதா உற்சவத்தையொட்டி இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும். திருப்பலி பூசையைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு பெண்கள் வடம் பிடித்து திருசொருப பவனி வீதி வழியாக வரவுள்ளது. (104)

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான தகைமையுடையோரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் 05.07.2013 தொடக்கம் காலை 9 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்ட செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (தொலைபேசி இல. 021222 2771) அவர்களிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.07.2013 முதல் 24.07.2013 வரை காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000 ரூபா கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 25.07.2013 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பொட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையில் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 25.07.2013 திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும்.

6. கேள்விகளை ஏற்றுக்கெள்வதும், நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித்தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7 கீழ் அட்டவணையில் குறிப்பிட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும். விதத்திலும், கேள்விப் பிணைப் பெறுப்பு இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | விலை விபரம் | மதிப்பீட் டுத்தொகை (மில்லியன்) | ஒப்பந்தகாலம் (மாதம்) | தேவையானதரம் | கேள்வி பிணைத் தொகை | மீளளிக் கப்படாத தொகை(ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JK/ADM/ 03/CONS. WORK/ 2013(1) | யாழ்ப்பாண பிரதேச செயலக நிர்மாண வேலை - பகுதி III | 10.98 | 5 மாதம் | C5/C6 | 110,000.00 | 1000.00 |
| JK/ADM/ 03/CONS. WORK/ 2013(11) | சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்மாண வேலை - பகுதி VII | 02.03 | 5 மாதம் | C5/C6 | 23,300.00 | 1000.00 |
| JK/ADM/ 03/CONS. WORK/ 2013(111) | யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக நான்கு மாடிக் கட்டட நிர்மாண வேலை - பகுதி III | 11.77 | 5 மாதம் | C5/C6 | 118,000.00 | 1000.00 |

(C/2400)

## மின்சாரமும் இல்லை மண்ணெண்ணெய்யும் இல்லை

### தூசி பிடிக்கிறது சமுர்த்தி முத்திரை

(வரணி)

தென்மராட்சிப் பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களால் மின் ஒளி கிடைக்காத மற்றும் ஓலைக் குடில்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டு சுமார் பத்து மாதங்கள் கடந்த நிலையிலும், இன்னும் தமக்கான மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பணத்திற்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படும் அதேவேளை எங்களுக்காக முத்திரைக்கான மண்ணெண்ணெய் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுவதாகவும், இனியாவது உரியவர்கள் கவனமெடுத்து எமது மண்ணெண்ணெண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ள முன்வர வேண்டுமென பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## வருடாந்த உற்சவம்

(வரணி)

வரணி வடக்கு கூழாநின்ற புலத்து முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினஙகள் நடைபெறும்.

உற்சவகாலத்திற்கு பிரதமகுரு அ.பிரமேச்சந்திர குருக்கள் (வட கோவை உதயகிரி) கலநது சிறப்பிக்கவுள்ளார். (150)

## தெல்லிப்பழையில் நடமாடும் சேவை

(தெல்லிப்பழை)

ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் 'பவ்ரல்' அமைப்பின் ஏற்பாட்டில் ஒப்பர் நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை நேற்றைய தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த நடமாடும் சேவையில் 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு அடையாளஅட்டை பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த நடமாடும் சேவை மூலம் மக்கள் தங்கள் அடையாள அட்டையைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் பிறப்பு அத்தாட்சிப்பத்திர வழங்கல், பொலிஸ் பதிவுகள், சமாதான நீதவானின் உறுதிப்படுத்தல்கள், மற்றும் கிராம அலுவலர்களின் உறுதிப்படுத்தல், புகைப்படம் எடுத்தல் என்று அனைத்து சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டது.

யுத்தம் காரணமாக வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் வாழும் மக்கள் தங்கள் ஆவணங்களை தவறவிட்டுள்ளனர். இந்த நடமாடும் சேவை மூலம் இதனைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இந்தச் சேவையினால் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 2,000 இற்கு மேற்பட்ட மக்கள் நன்மை அடைவார்கள் என்றும் எதிர்பார்ப்பதாக பிரதேச செயலர் சிறிமோகன் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் சந்தன மரச்செய்கை

யாழ். நவற்கிரிப் பிரதேசத்தில் உள்ள மூலிகைத் தோட்டத்தில் சுதேச வைத்திய திணைக்களத்தினால் சந்தன மரச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் வடமாகாண சபையின் நிதியுதவியுடன் இந்த மூலிகைத் தோட்டம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மருத்துவ குணங்கள் கொண்ட அரிய வகைத் தாவரங்கள், மரங்கள்,



செடிகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

மாதுழை மரத்திற்கு அருகில் இதனை நடுகை செய்தால் அதன் சத்தியைப் பெற்று சந்தன மரம் முதிர்ச்சியடையும் என்றும் அந்த அடிப்படையில் மாதுழை மரங்களுக்கு நடுவில் சந்தன மரம் நடுகை செய்யப்பட்டுள்ளதாக தோட்டப்பராமரிப்பாளர் தெரிவித்தார்.

# கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் சேவை மனப்பான்மையாக இருக்க வேண்டும்

## மூத்த பொருளியலாளர் லோகசிங்கம்

(மந்திகை நிருபர்)

தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்கள், அற்ப சொற்ப இலாபங்களை எதிர்பாராது எமது மண்ணுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கருத்தில் கொண்டு போட்டி மனப்பாங்கினைக் குறைத்துச் சேவை செய்ய முன்வர வேண்டும் என பருத்தித்துறை பிரதேசசபையின் துணைத் தவிசாளரும், மூத்த பொருளியலாளருமான மாணிக்கம் லோகசிங்கம் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி காலை சபைத் தவிசாளர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றபோது, துணைத்தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தனியார் கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்தி அவற்றைப் பயனுறுதிமிக்கதாக மாற்றுவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை அரசாங்கம் இலவசக் கல்வித் திட்டத்தினை வழங்கியதன் ஊடாக எல்லா மாணவர்களுக்கும் கல்வி உரிமை கிடைப்பதற்கு வழி உருவாக்கப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வறிய மக்கள் உட்பட எல்லோருமே பரீட்சைக் கல்வியைப் பெறுவதற்கு இலவசக் கல்வியைவிட தனியார் கல்வி நிறுவனங்களை நாடுவது என்பதே உண்மையாகும்.

எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் உன்னதமான அர்ப்பணிப்புள்ள சேவையை மேற்கொண்டு வருவதைக் காண முடிகின்றது. ஆகவே அந்நிறுவனங்களின் சுயாதீனத்தில் எத்தகைய தலையீடும் செய்யக்கூடாது.

இந்நிலையில், எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கல்வி நிறுவனங்கள் உடனடியாக எமது சபையில் பதிவு செய்ய வேண்டும். கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் இடம்பெற்றிருந்த கலந்துரையாடலில் எட்டப்பட்ட முடிவுகள் அந்த மாவட்ட நீதிமன்றப் பதிவாளரினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதனை அனுசரித்துக் கல்வி நிறுவன இயக்குநர்கள் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (61)

# கரைச்சிப் பிரதேச செயலகத்தில் ஓவியப் பயிற்சிப்பட்டறை

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், காவேரி கலாமன்றமும் இணைந்து நடத்தும் ஓவியப் பயிற்சிப்பட்டறையும், புகைப்படக் கண்காட்சியும் எதிர்வரும் வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஓவியக்கலை ஆர்வலர்கள், புகைப்படக்கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு கரைச்சிப் பிரதேச செயலக கலாசார பேரவையினர கேட்டுக்கொண்டுள்ளனர். (90)

# இலவச ஆயுர்வேத சிகிச்சை

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேச சபையினால் இலவச ஆயுர்வேத வைத்திய சேவை சிறப்பான முறையில் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வாரத்தில் இரண்டு நாட்களான திங்கள், புதன்கிழமைகள் மட்டும் இயங்கும் இவ் வைத்தியசாலையின் வைத்தியரால் வழங்கப்படும் தமிழ் மருந்து வகைகள் யாவும் மிகுந்த பலனைத் தருவதாக நோயாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், எண்ணெய் வகைகளும் மற்றும் தூள் மருந்துகளும் இங்கு நோயாளர்களின் நோயின் தன்மைக்கேற்ப வழங்கப்படுகின்றன.

இங்கு சிறுவர் முதல் வயோதிபர் வரை வந்து இலவச சிகிச்சையினைப் பெற்றுச் செல்வதுடன், இந்த ஆயுர்வேத சிகிச்சையினால் தாம் பெரிதும் நன்மையடைவதாக நோயாளர்கள் தரப்பில் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது. (85)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் விலங்கு விசர்நாய் நோய்க்கான தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடு நடைபெற்று வருவதாக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதில் ஏழாலை வடக்கு, ஏழாலை கிழக்கு, ஏழாலை மேற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை தென்மேற்கு ஆகிய பிரிவுகளில் தொடர்ச்சியாக இம் மருந்தேற்றல் செயற்பாடு இடம் பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கொண்டு சென்று தடுப்பு மருந்துகளை ஏற்றுமாறும், முன்னைய வருடங்களில் இவ்வாறு தடுப்பு மருந்து ஏற்றிய பதிவேட்டின் அட்டையையும் தவறாது கொண்டு வருமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் வளர்ப்பு நாய்களைப் பதிவு செய்யவுள்ளதால் நாய்களைப் பதிவு செய்து அட்டை வழங்குவதற்கான கட்டணங்களையும் தவறாது கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசடி சோனப்பு வீதியை புனரமைக்க கோரிக்கை

(அச்சுவேலி)

கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள அரசடி சோனப்பு வீதியானது நீண்டகாலமாகப் புனரமைப்பின்றி குண்டும் குழியுமான நிலையில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது காணப்படுகின்றது.

இந்த வீதிப் பகுதியிலேயே அம்பம் வைத்தியசாலையும் அமைந்துள்ளது. எனவே அவசர வேளைகளிலும், நோயாளர்களை இந்த வீதி யூடாகக் கொண்டு செல்வதில் பல்வேறு இன்னல்களைச் சந்திப்பதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், பாடசாலை மாணவர்களும், இந்த வீதியூடாகவே பாடசாலைக்குச் செல்வதால் மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்வதுடன், துவிச்சக்கர வண்டிகளில் பயணம் செய்வோர் குண்டுகள், குழிகளுக்குள் துவிச்சக்கர வண்டிகள் விழுவதால் அவை பழுதடையும் நிலையும் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், நெல்லியடிச் சந்தை, கடை மற்றும் வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்வோரும் இத்தகைய வீதியால் செல்வதால் உரிய நேரத்துக்கு தமது அலுவலகங்களுக்குச் செல்ல முடியவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், வீதியின் நடுவே குண்டு குழிகளுக்குள் சிறு சிறு கற்களும் ஆங்காங்கே காணப்படுவதால் பாதசாரிகளும் பயணத்தை மேற்கொள்வதில் சிரமப்படுகின்றனர்.

மேலும் மழை காலங்களில் இந்தக் குண்டுகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதால் வீதிகள் சேறும், சகதியுமாகக் காணப்படுகின்றது. இதனால் நுளம்புப் பெருக்கமும் அதிகரிக்கும் எனவும் வீதி ஓரங்களில் வசிக்கும் பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எனவே, மழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டு உரியவர்கள் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பயணிகள் கோரிக்கை விடுகின்றனர். (85)

# வீடுகளுக்கு மின் இணைப்பு இல்லை; கணனி இருந்தும் கற்க முடியாத நிலை



(முழங்காவில்)

பூநகரி மன்னார் வீதியில் உள்ள 4ஆம் கட்டைப் பகுதியிலும், தெளிகரை இந்திய வீடமைப்புத் திட்டம் நிறைவுபெற்ற கிராமத்திலும் பெருந்தொகையானோர் தமது வீடுகளுக்கு மின் இணைப்புக்களைச் செய்துவிட்டு மின்சாரம் எப்போது கிடைக்கும் எனக் காத்திருப்பதாக அப்பிரதேச குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மின்சாரசபை அலுவலகத்தில் உரிய பவடிங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைத்தும் இதுவரை தமக்கு மின்சாரம் வழங்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கல்வியைத் தொடரும் தமது பிள்ளைகளுக்கு கணனி வசதிகள் இருந்தும் அவற்றைப் பாவிக்க முடியாமலும், கற்க முடியாமலும் இருப்பதாக பெற்றோர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். (112)

# காத்திரமான செயற்பாடு




நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 9 ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 24 ஆம் திகதி வரை வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ் உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அலை அலையாகக் கடல் அலையைக் கூடப் பொருட்படுத்தாது தரிசிக்க வந்தார்கள். நிறைவு நாளான சப்பரம், தேர், தீர்த்தம் ஆகிய தினங்களில் பக்தர்கள் வருகை கணக்கிட முடியாதவாறு குறிகட்டுவான் இறங்குதுறையில் குவிந்து காணப்பட்டார்கள்.

மக்களின் சீரான போக்குவரத்துக்காக யாழ்ப்பாணத்திலிருந்து குறிகட்டுவானுக்கும், குறிகட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் ஆக அரச மற்றும் தனியார் பேருந்துகள் சகோதர ஒற்றுமையுடன் எவ்வித குழப்பமும் இன்றி சேவை செய்து பக்தர்களை உரிய நேரத்தில் உரிய இடத்திற்கு அனுப்பி வைத்தது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

(நலன்விரும்பி)





நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காந்தியவாதி அமரர் மு.மாரியப்பனின் அஞ்சலி நிகழ்வு மற்றும் காந்தீய கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளின் பதிவுகள்... (10)

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## குண்டுச்சட்டியும் குதிரையும்!

ஒரு சிறுவன் இருந்தான். நல்ல பலசாலி. கோபமும், அவசரமும், உணர்ச்சிவேகத்தில் காரியங்கள் செய்பவனாகவும் இருந்தான். தன்னொத்த சிறுவர்களிடம் வீரத்தைக் காட்டிக் கொள்வதிலும் எவரையும் எதிர்ப்பதிலும் அவனுக்குச் சாகச ஆர்வமிருந்தது.

ஒருநாள் அரவிந்தர் அந்த சிறுவனைப் பார்த்தார். "தம்பி நீ நல்ல பலசாலியும் புத்திசாலியும் கூடத்தான். அதிலொன்றும் சந்தேகமேயில்லை. உன்னாலே எல்லாம் முடியும். அந்த அளவுக்கு வலு இருக்கிறது உன்னிடம். புத்தியும் இருக்கிறது. இருந்தாலும் நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்கிறாயா?" என்றார்.

"கேளுங்கள்" என்றான் சிறுவன்.

"உன்னை மாதிரிப் பலசாலியாக உள்ள பையனுக்குக் கடினமான செயல் எது? அடிக்கு அடி கொடுப்பதா? — அதாவது உன்னை ஒருத்தன் அவமதித்துவிட்டால் உடனே அவன் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விடுவது கடினமான செயலா? அல்லது அந்த நேரத்தில் உன் கையை இறுக மூடிக் காற்சட்டைப் பைக்குள்ளே வைத்துக்கொள்வது கடினமான செயலா?" என்று கேட்டார் அரவிந்தர்.

"என்னைப் பொறுத்தவரைக்கும், உடனே அவன் முகத்தில் குத்து விடுவது மிகச் சுலபம். அந்த நேரத்தில் கையை மூடி வைத்துக்கொண்டு சும்மா இருப்பது மிகவும் கஷ்டம்..." என்றான் சிறுவன்.

"உன்னை மாதிரி புத்திசாலியான பையனுக்கு எது பெருமை அல்லது வீரம்? சுலபமான காரியத்தைச் செய்வதா கடினமான காரியத்தைச் செய்வதா?" என்று கேட்டார் அரவிந்தர்.

சிறுவன் கொஞ்சம் தயங்கினான்... யோசித்தான்... பிறகு, "கடினமான செயலைச் செய்வதுதான் வீரம்" என்றான்.

"மிகவும் நல்லது. சந்தர்ப்பம் வருகிறபோது உன் வீரத்தை அப்படிக் காண்பித்துக்கொள்" என்று கூறிவிட்டு நடந்தார் அரவிந்தர்.

நம்மிலும் பலர் எதிரியைப் பழிக்குப் பழி வாங்குவது தான் வீரம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். சண்டையில் வெல்வதல்ல; சண்டையைத் தவிர்ப்பதே பெரிய வீரம் என்பதை அறியாமலிருக்கிறோம். உணர்ச்சிகர அலையில் உண்மையை அடித்துச் சென்றுவிடுகிறார்கள்.

ஆவேசப் பேச்சுக்களும் பழிவாங்கும் முழக்கங்களும் தம்மைச் சார்ந்தவர்களுக்கு எந்தப் பாதுகாப்பையும் பெற்றுத் தராது. இன்னா செய்தாரையும் நன்னயம் செய்துவிடுவதாக தமது அணுகுமுறைகளில் விவேகத்தைக் காண்பித்து வெல்வதே தான் சார்ந்தவர்களையும் காக்கும் வீரமாக அமையும்.

நாம் போட்டுக் கொண்டிருக்கும் வீரமுழக்கங்கள் நமக்கு எந்தப் பயனையும் தருவதில்லை; தரப்போவதுமில்லை என்பதைத் தெரிந்துகொண்டும் அதையே வீரம் என்று நம்பி மயங்கிக் கொண்டிருக்கிறோம். பயன்தராத வெற்று வீரப் பேச்சுக்கள் நம்மை எங்கு கொண்டுபோய்ச் சேர்க்கும்?

எந்த இடத்திற்கும் கொண்டுசென்று சேர்க்காது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் நம் சமூகத்திற்கு இப்போது செய்துகொண்டிருப்பதுபோல் குண்டுச் சட்டிக்குள் குதிரையை ஓட்டிக்கொண்டிருப்பதாகவே இருக்கும்.

- ஆசிரியர்

# அதிகாரங்களை பறித்துவிட்டு மாகாண ஆட்சி வழங்கத்திட்டம்

## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

மாகாண சபைக்குரிய அனைத்து அதிகாரங்களையும் எடுத்துவிட்டு "எலும்பும் தோலுமான" வடமாகாண சபையை வழங்குவதற்கே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தியாகிகள் தின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 26 வருடங்கள் கடந்துவிட்டன. இதற்குள் ஒன்றிணைந்திருந்த வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைக்குரிய 15 அதிகாரங்கள் திவிநெகும சட்டத்தின் மூலம் எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வடக்கு மாகாண தேர்தலை நடத்துவதற்கு முன்பாக பொலிஸ், காணி அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களையும் எடுத்துவிட்டு வெறும எலும்பும் தோலுமான மாகாண சபையை வழங்குவதற்கே இன்று அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் முழுமையாக மாற்றி அமைக்கும் பாரதூரமான நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே கடந்த சில மாதங்களாக அரசியல் ஆய்வாளர்களும் புத்திஜீவிகளும் ஊடகங்களில் பக்கம் பக்கமாக இவ்விடயத்தை எழுதுகின்றார்கள். நாம், மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களை இழந்துள்ளோம். 38 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கவீனர்கள் உருவாகி உள்ளதுடன், 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு பெற்றோர் இல்லை என்ற நிலையில் நிற்கும்போது நாம் எமக்கு முன்னால் உள்ள சந்தர்ப்பங்களை எவ்வாறு பயன்படுத்தப் போகினறோம் என்பதே இன்றைய சவாலாக உள்ளது.

பத்மநாபா அன்றே தீர்க்க தரிசனமாக சிந்தித்த விடயமே இந்திய - இலங்கை ஒப்பந்தம் வெறுமனே இரு நாடுகளுக்கும் இடைப்பட்ட ஒப்பந்தம் இல்லை. சர்வதேச ரீதியில் செய்யப்பட்ட ஒப்பந்தம். ஆனால், அவ்வாறு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை இன்று இலங்கை அரசாங்கம் தன்னிச்சையாக இந்தியாவையும் மீறி வடக்கையும் கிழக்கையும் பிரித்துள்ளது. மாகாண சபை அதிகாரங்களை குறைத்துள்ளது. காணி, பொலிஸ் அதிகாரங்களை இல்லாமல் செய்துள்ளது. எனவே, இலங்கை அரசாங்கம் தான் நினைத்த வாக்கில் செய்து வரும் தான்தோன்றித்தனமான போக்கும் இலங்கையினுடைய வெளிவிவகாரக்கொள்கை, சீனாவுடன் அரசு வைத்துள்ள பாதுகாப்பு ஒப்பந்தங்கள், பொருளாதார ஒப்பந்தங்கள் இந்தியாவை எரிச்சலூட்டியுள்ளது என்றார்.

# மன்னாரில் டெங்கு ஒழிப்பு வேலை

# கிராமரீதியாக முன்னெடுப்பு

தேசிய டெங்கொழிப்பு வாரத்தை முன்னிட்டு மன்னார் சுகாதாரத் திணைக்களம் ஏற்பாடு செய்த டெங்கொழிப்பு வேலைத்திட்டம் மன்னாரில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது. சாந்திபுரம், தோட்டக்காடு, செல்வநகர் ஆகிய கிராமங்களில் டெங்கொழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஞானசீலன் குணசீலன் தலைமையில் இந்த டெங்கொழிப்பு வேலைத் திட்டம் ஆரம்பமானது. சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து மன்னார் பிரதேச செயலகம், மன்னார் பொலிஸார், மன்னார் மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மன்னார் உலக தரிசன நிறுவனம் (வேள்விஷன்), கிராம அலுவலர்கள் ஆகியோருடன் பொதுமக்களும் இணைந்து டெங்கொழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இந்த டெங்கொழிப்பு வேலைத் திட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்நிலையில், இன்று தமிழ் நகரிலும் 3 ஆம் திகதி மூர் வீதியிலும், 4 ஆம் திகதி உப்புக்குளத்திலும் 5 ஆம் திகதி பேசாலையிலும் 4 ஆம் வட்டாரத்திலும், 6 ஆம் திகதி ஜோசப் வாஸ் நகரிலும் 7 ஆம் திகதி மன்னார் சுகாதாரப் பணிமனையிலும் டெங்கொழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமென மன்னார் மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி, டாக்டர் ஞானசீலன் குணசீலன் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு அதனை அழித்தல், மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல், தேவைப்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்ற வேலைத் திட்டங்களே இதன்போது மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறினார்.

# பிரச்சினைக்கு குழுக்கள் நியமனம்

# அரசாங்கம் மௌனம் சாதிப்பு

அரசாங்கம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண குழுவொன்றை நியமித்துவிட்டு மௌனமாக இருப்பதாவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை புறந்தள்ளிவிட்டு, 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான பிரச்சினையை பூதா கரமாக்கி இன்று அனைத்துப் பிரச்சினைகளுக்கும் குழுவொன்றை நியமித்துவிட்டு அரசாங்கம் மௌனமாக இருப்பதால், அரசால் நியமிக்கப்பட்ட குழுக்கள் குப்பை மேட்டைப்போல் குவிந்து காணப்படுகிறது. பிரச்சினைகளைத் தீர்க்க அரசில் இரைச்சல் மட்டுமே எழுப்பப்படுவதாகவும் கயந்த கருணாதிலக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மீனவர் எரிபொருள் மானியஅட்டை

# 5000 ரூபாவிற்கு விற்பனை

மீனவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் எரிபொருள் மானியம் தவறான முறையில் கையாளப்படுவதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மோசடியான முறையில் எரிபொருள் மானிய அட்டைகள் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது. சிலர் மானிய அட்டைகளை தனியார் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு ஐயாயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்திருந்தனர். இதற்கமைய மீன்பிடி துறைமுகங்களில் மாத்திரம் எரிபொருள் மானியத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தியதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனால் மீனவர்களுக்கான எரிபொருள் மானியத்தைக் கடந்த மாதம் 308 மில்லியன் ரூபாவிலிருந்து 265 ரூபா வரை குறைத்துக் கொள்ள முடிந்தது. மீன்பிடித் துறைமுகங்களில் எரிபொருள் மானியம் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மோசடியில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடையாது என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.





# விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள்

## 46

■ வே. அர்ச்சுணன்

**மட்டுவில் வாகையடி முகாமில் இருந்து பாப்பா செய்த குறும்புத்தனங்கள் மேஜர் கேடில்ஸ்சுக்கு தெரிந்திருந்தால் கேடில்ஸ் உடனடியாகவே பாப்பாவை போட்டுத் தள்ளியிருப்பார். ஏற்கனவே கேடில்ஸ் பெயரைக் கேட்டால் நடுநடுங்கும் அளவிற்கு மாற்று இயக்கத்தினரை உயிருடன் தீயில் செம்மணியில் கொளுத்திய கேடில்ஸ் தன் கைத் துப்பாக்கியால் பலரை போட்டுத் தள்ளியுமுள்ளார். அவ்வாறே இயக்கத்தின் போராளிகள் தொடர்பில் கேடில்ஸ் குற்றம் கண்டால் அவர்களுக்கும் உடனடியாகவே தண்டனை வழங்கி வந்தார். கேடியின் தண்டனையில் இருந்து தப்பிய பாப்பா தொடர்ந்து தப்பிக் கொண்டே இருந்தார்.**

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தளபதிகள் புடை சூழ வீற்றிருந்து சுவாரஸ்யமாக பல்றேு விடயங்கள் தொடர்பாக பம்பலடிக்கத் தொடங்கினார். தளபதிகளின் மெய்ப்பாதுகாவலர்களுக்கு ஒரே கொண்டாட்டம் தான். ஏனென்றால் இயக்கத்தில் ஏனைய தளபதிகள் கதைக்கத் தயங்குகின்ற விடயங்களைக் கூட அன்ரன் பாலசிங்கம் வெளிப்படையாக பம்பலாக கூறி முடித்து விடுவார். இவ்வாறு எல்லாத் தளபதிகளையும் போராளிகளையும் கிண்டலடித்து பம்பலடிப்பதில் அன்ரன் பாலசிங்கத்திற்கு நிகராக இயக்கத்தில் எவருமே இருந்ததில்லை. அன்ரன் பாலசிங்கம் போன்று ஏனைய தளபதிகள் அல்லது பொறுப்பாளர்கள் யாராவது பம்பலடித்து விட்டால் அது இயக்கத்தில் பெரும் விசாரணைகள் வரை போய் முடிவதுண்டு.

இவ்வாறு தளபதிகளையும் பொறுப்பாளர்களையும் கிண்டலடித்து வந்த அன்ரன் பாலசிங்கம் பாப்பாவையும் விட்டு வைக்கவில்லை. தமிழீழ விளையாட்டுத்துறைக்கு பாப்பா நியமிக்கப்பட்டதாக கேள்விப்பட்ட அன்ரன் பாலசிங்கம் லண்டனில் இருந்தவாறு பாப்பாவிற்கு வாழ்த்து தெரிவித்ததுடன் நான் நேரடியாக தாயகத்திற்கு வருகின்ற போது நேரில் சந்திக்கின்றேன் என்று கூறி விட்டு, தமிழ்ச்செல்வன் நல்ல பொறுப்பொன்றை உம்மிடம் தந்திருக்கின்றார் நீரும் பெரிய விளையாட்டு காட்டுகின்றீராம். நான் எல்லாத்திற்கும் தம்பியிடம் (பிரபாகரனிடம்) வருகின்ற பொழுது நேரில் சந்திக்கின்றேன் என்று கூறி பாலசிங்கம் தொடர்பை துண்டித்து விட்டார்.

தமிழீழ விளையாட்டுத்துறையின் பொறுப்பாளராக தமிழ்ச் செல்வனால் நியமிக்கப்பட்ட பாப்பாவின் பின்னணியை சற்று மேலோட்டமாக பார்ப்போமானால் பாப்பா புலிகளின் தென்மராட்சிப் பிரிவு அரசியல் துறைப் பொறுப்பாளராக மேஜர் கேடில்ஸ் இருந்த காலப் பகுதியில் ஒரு சிறு பையனாக காற்சட்டையுடன் இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொள்ளாமல் ஒரு உதவியாளராக செயற்பட்டு வந்தார். இந்தக் காலப்பகுதியில் தென்மராட்சிப் பகுதியில் தமிழ்ச்செல்வனும் இயக்க நடவடிக்கைகளை மேஜர் கேடில்ஸ்சின் கீழ் இருந்து மேற்கொண்டு வந்தார். தமிழ்ச்செல்வனும் பாப்பாவும் பாடசாலைக் காலத்திலிருந்தே நெருங்கிய நண்பர்களாக இருந்தது மட்டுமல்லாமல் இருவரும் தென்மராட்சிப் பகுதியை சேர்ந்தவர்களாவர். தென்மராட்சிப் பகுதியில் உள்ள மட்டுவில் நுணாவில் பகுதியை சொந்த இடமாகக் கொண்ட பாப்பாவுக்கு தான் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன் என்ற தாழ்வுணர்ச்சி இருந்து வந்தது. குறிப்பாக தென்மராட்சி பிரதேசத்தில் மட்டுவில் நுணாவில் பகுதியில் சாதிய அடக்குமுறை மேலோங்கி காணப்பட்டது. இந்த நிலையில் பாப்பா தன்னை முழுமையாக இயக்கத்தில் இணைத்துக் கொண்டு சாதிய ரீதியாக சவால் விட்டவர்களை நேரடியாக சந்தித்து எச்சரிக்கை செய்து வந்தார்.

ஒரு கட்டத்தில் தமிழ்ச் செல்வனின் வேண்டுகோளுக்கு இணங்க தன்னை முழுமையாக இயக்கத்தில் இணைத்துக் கொண்ட பாப்பா தென்மராட்சி மட்டுவில் வைரவ கோயிலடிப் பகுதி வீதியில் இருந்த புலிகளின் வாகையடி முகாமில் இருந்து செயற்பட்டு வந்தார். இந்த முகாம் ராசன் என்ற தனியார் ஒருவரின் வீட்டில் 1986ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயங்கி வந்தது. இந்த முகாமில் இருந்து செயற்பட்டு வந்த பாப்பா அன்றைக்கு தனது விளையாட்டுக்களையும் ஆரம்பிக்கத் தொடங்கினார். மட்டுவில் வாகையடி முகாமில் மூன்றாவது வீட்டில் இருந்த சண்முகலிங்கம் என்பவருக்கு நான்கு பெண் பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் ஒருவர் மீது பாப்பா காதல் கொண்டதையடுத்து உடனடியாக அவர் வேறு முகாமிற்கு மாற்றி அனுப்பப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டார்.

அன்றைய காலப் பகுதியில் இத்தகைய காதல் விவகாரங்களில் ஈடுபடுபவர்களுக்கு இயக்கம் அதி உச்ச தண்டனையான மரண தண்டனையை உடனடியாகவே நிறைவேற்றி வந்தது. அன்று தமிழ்ச்செல்வனால் காப்பாற்றப்பட்டார் பாப்பா. அதன்பின்னரும், கிளிநொச்சியில் இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சில் கொல்லப்படும் வரை தமிழ்ச் செல்வன் பாப்பாவை பல்வேறு நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எல்லாம் காப்பாற்றி வந்தார். பாப்பாவின் பல்வேறு குழப்படிகள் தில்லுமுல்லுகள் பற்றியெல்லாம் இயக்கத்தின் பல போராளிகளுக்கு தெரிந்திருந்த போதிலும் பாப்பா தொடர்பில் கூடுதலாக கதைத்தால் தமிழ்ச் செல்வன் தங்களை ஏதோ ஓர் கட்டத்தில் பழிவாங்கி விடுவார் என்ற அச்சம் போராளிகளிடத்தில் நிலவி வந்தது.

மட்டுவில் வாகையடி முகாமில் இருந்து பாப்பா செய்த குறும்புத்தனங்கள் மேஜர் கேடில்ஸ்சுக்கு தெரிந்திருந்தால் கேடில்ஸ் உடனடியாகவே பாப்பாவை போட்டுத் தள்ளியிருப்பார். ஏற்கனவே கேடில்ஸ் பெயரைக் கேட்டால் நடுநடுங்கும் அளவிற்கு மாற்று இயக்கத்தினரை உயிருடன் தீயில் செம்மணியில் கொளுத்திய கேடில்ஸ் தன் கைத் துப்பாக்கியால் பலரை போட்டுத் தள்ளியுமுள்ளார். அவ்வாறே இயக்கத்தின் போராளிகள் தொடர்பில் கேடில்ஸ் குற்றம் கண்டால் அவர்களுக்கும் உடனடியாகவே தண்டனை வழங்கி வந்தார். கேடியின் தண்டனையில் இருந்து தப்பிய பாப்பா தொடர்ந்து தப்பிக் கொண்டே இருந்தார்.

இவ்வாறு தப்பிக் கொண்டிருந்த பாப்பா தொடர்பில் அனைவரும் வாய்மூடி மௌனிகளாக இருந்த போதிலும் அன்ரன் பாலசிங்கம் வெளிப்படையாகவே பாப்பா தொடர்பாக நக்கல்களைக் கூறி வந்தார். இயக்கத்தில் தலைவருக்கு முன்னால் இருந்து சிகரெட் பத்துகின்ற உரிமை பாலசிங்கத்திற்கு மட்டுமே இருந்தது. ஏனையவர்கள் ஒளித்துக் கூட சிகரெட் பத்த முடியாது. இவ்வாறு பாலசிங்கத்திற்கு இயக்கத்தில் வெளிப்படையாகவே பல்வேறு விடயங்களைக் கதைப்பதற்கு அனுமதியிருந்தது. பாப்பா தொடர்பில் பாலசிங்கம் என்ன சொன்னார் என்பதை அறியும் ஆவல் உங்களிற்கு கூடுதலாக இருக்கும். அதை அடுத்த தொடரில் தொடர்ச்சியாக பார்ப்போம்.

(தொடரும்)

# மாகாண அதிகார திருத்தங்களில் 5 விடயங்கள் ஏற்கப்பட்டுள்ளன

## ஜாதிக ஹெல உறுமய



மாகாண சபைகளின் அதிகாரங்களில் திருத்தங்கள் ஏற்படுத்துவது தொடர்பான 05 விடயங்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது எனவும் அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பதில் தான் அரசாங்கத்தின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். காலியில் நடைபெற்ற கட்சியின் மாவட்ட மாநாட்டில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தெளிவாக தனது நிலைப்பாட்டை நாட்டுக்கு கூறவேண்டும். நாம் இந்தியாவுக்குச்சென்றிருந்த போது, இந்திய அமைச்சர்களை சந்தித்து எமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தினோம். இந்திய தூதுவரை சந்தித்து, தெளிவுபடுத்தினோம். ஏன் உங்கள் அரசாங்கம், எங்கள் பிரதமரிடம் தனது நிலைப்பாட்டை கூறவில்லை என இந்திய அதிகாரிகள் எம்மிடம் கேள்வி எழுப்பினர்.

இது தவறானது, அரசாங்கம் தனது நிலைப்பாட்டை நேரடியாக கூறவில்லை. இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் இந்தியாவிற்குரியவர்கள் என இந்தியா நினைத்துக்கொண்டுள்ளது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே தமிழர்கள் இலங்கையில் இருப்பதாக கூறுகின்றனர். விஜயனுக்கு பின்னரே சிங்களவர்கள் வந்தாக நாம் கூறுகிறோம். சிங்களவர்கள் வங்க தேசத்தில் இருந்து வந்தாக கூறுகின்றனர். இதனை ஏற்றுக்கொள்வது, அல்லது நிராகரிப்பது என்பது வேறு விடயம். எனினும் சிங்களவர்கள், இந்தியாவை சேர்ந்தவர்கள் என்பதை இந்தியா ஏற்கவில்லை. சிங்களவர்களாகிய எமது அடையாளம் இந்தியாவில் இருந்தே கட்டியெழுப் பப்படுகிறது. இந்தியதனது பொருட்களை தமிழர்களுக்கு மாத்திரம் விற்பனை செய்யவில்லை.

இந்தியாவில் இருந்து அரசி, பருப்பு உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்கிறோம். ஆனால மற்றுமொரு பருப்பை சாப்பிட்டோம். இந்தியாவின் மைசூர் பருப்பு உண்பதை நாங்கள் விரும்புகிறோம். ஆனால் வேறு பருப்புகளை உண்ண நாங்கள் விரும்பவில்லை.காரணம் இலங்கை சுயாதீனமான நாடு, இந்திய பிரதமர் மன்மோகன் சிங், இலங்கையின் அரசியல் அமைப்பில் மாற்றங்களை செய்வதற்கான அழுத்தங்களை கொடுக்க முடியாது. இலங்கை சிறிய நாடாக இருக்கலாம் ஆனால் இந்தியா, இலங்கையை தனது ஆணையின் கீழ் வைத்துக் கொள்ள உரிமையில்லை.

தமிழ் மக்களுக்கு பொருத்தமானது என்பதால் நாங்கள் மாகாண சபைகளை எதிர்க்கவில்லை. மாகாண சபைகள் தொடரபில் இனவாதத்தை ஏற்படுத்தியது ஜாதிக ஹெல உறுமய அல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இனவாதத்தை ஏற்படுத்தியது. மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டமைப்பின் மாநாட்டில் தமது ஈழம் தேவை எனத் தெரிவித்தது. வடக்கு மாகாண சபை ஏற்படுத்தப்பட்டால், நாட்டில் சமூக - அர்சியல் நெருக்கடி ஏற்படும் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

## சின்னம்மை தடுப்பூசி

6-12 மாத குழந்தைகளுக்கு மேலதிக விசேட சின்னம்மை தடுப்பூசி மருந்து வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

குழந்தைகளுக்கான சின்னம்மை ஊசி பிறந்து ஆறாவது மாதத்தில் வழங்கப்படுவது வழமை ஆகும்.

எனினும் நாட்டில் சின்னம்மையின் காரணமாக பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்தமையைத் தொடர்ந்து மேலதிக ஊசி மருந்து வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 5ஆம் திகதி இந்த ஊசி மருந்து வழங்கப்படவுள்ளது.

## வாழ்க்கைச் செலவு சுட்டியை வர்த்தமானி மூலம் அறிவிக்கவும்

அரசாங்கம் வாழ்க்கைச் செலவு சுட்டியை வர்த்தமானி மூலம் அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்க்ட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுனமற்உறுப்பினர் ஜோச்ப மைக்கல் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளன.நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு சுட்டியை இன்னும் வர்த்தமானியில் அறிவிக்கவில்லை.இதனால் வேதனம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் நாட்டு மக்களுக்கு அநீதி இழைக்கப்படு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நுகர்வோர் அதிகார சபைக்கு 40 மில்லியன் வருமானம்

இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் வர்த்தக நிலையங்கள் மீது 29,000 சுற்றி வளைப்புக்கள் மேற் கொள்ளப் பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்தமை, விலை பட்டியலை காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, காலாவதி திகதியை மாற்றியமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இச் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதன்போது ,40 மில்லியனுக்கு அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அவ் அதிகாரசபையின் தலைவர் குறிப்பிட்டார். நாடு முழுவதிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## நிதி அமைச்சின் செயலாளரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தரவை எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. வற்வரி மோசடி வழக்கு தொடர்பில் சாட்சியம் பெறுவதற்கே பீ.பி. ஜயசுந்தரவை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 400 கோடி ரூபா வட் வரி மோசடி வழக்குத் தொடர்பில் தற்போது விளக்க மறியலில் உள்ள சந்தேகநபர் ஒருவர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

## விமான நிலையத்தில் பயணிகளுக்கு கட்டாய குருதி பரிசோதனை

மலேரியா காய்ச்சல் பரவியுள்ள நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகைதருவோர் விமான நிலையத்தில் கட்டாயமாக குருதி பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான சட்டத்தை வகுப்பது தொடர்பில் சுகாதார அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சரத் தெனியகெ தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகைதந்த 28 மலேரியா நோயாளர்கள் இது வரை அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய சுமார் ஐந்து நோயாளர்களேனும் மாதாந்தம் கண்டுபிடிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் விமான நிலையத்தில் அடையாளம் காணப்படாத மலேரியா நோயாளர்கள் நாட்டிற்குள் சென்றால் மீண்டும் இலங்கையில் மலேரியா காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதாக மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.கடந்த வருடம் 24 மலேரியா நோயாள்ர்க்ள அடையாளம் காணப்பட்டதாகவும் 74 மலேரியா நோயாளர்கள் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்திருந்ததாகவும் அவர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய விமான நிலையத்தில் குருதி பரிசோதனை கட்டாயமாக்கப்பட்டால் மலேரியா நோயாளர்கள் நாட்டிற்குள் பிரவேசிப்பதை முற்றாகத் தடுக்க முடியும் என டொக்டர் சரத் தெனியகே மேலும் தெரிவித்துள்ளார்.

## கடற்பிராந்தியங்களில் பாரிய அலைகள் எழலாம்

கடற்பிராந்தியங்களில் பாரிய அலைகள் எழும்பக்கூடிய நிலை எதிர்வரும் சில நாட்களுக்கு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நீர்கொழும்பு-உஸ்வற்ற கெய்யாவ பிரதேசத்தின் கொழும்பு போப்பிற்றிய வீதி, கடல்நீரால் சூழப்பட்டது.

சில மணிநேரம் பாரிய கடல் அலைகள் தரை நோக்கி வந்ததன் காரணமாக கரையோரத்தில் இருந்த கல் அணைகளும் சேதமடைந்துள்ளன இது தவிர கடல்நீர் நிலத்தினுள் புகுந்ததன் காரணமாக சில வீடுகளும், வீதிகளும் கடல் மணலினால் மூடப்பட்டிருந்தன.

இதேபோன்ற நிலைமை, தென் இந்திய கன்னியாகுமரி பகுதியிலும் ஏற்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் போது கடல் அலைகள் 15 முதல் 20 அடிகள் வரை உயர எழுந்ததாவும், சுமார் 100 வீடுகள் வரை பாதிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 24 மணி நேர காலப்பகுதிக்கான காலநிலையை நோக்கும் போது, மேற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் தெற்கு பிராந்தியங்களில் அதிக மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக காலநிலைய அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, சர்வதேச காலநிலை தகவல்களை வெளியிடும் www.weather.com தளத்தின் தகவலின்படி, கொழும்பு, கண்டி மற்றும் ஹம்பாந் தோட்டை நகரங்களில்" 50 சதவீத மழை வீழ்ச்சியினை எதிர்பார்க்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்ணின் சங்கிலியை பறித்தவர் சிக்கினார்

குருநாகல் நகரில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணொருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டுச் சென்ற நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.சந்தேக நபரால் கொள்ளையிடப்பட்ட 60,000 ரூபா பெறுதியான தங்கச் சங்கிலியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. போயகன பகுதியைச் சேர்ந்த 31 வயதான நபரொருவரே இவ்வாறு கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீசெல்ஸுக்குச் சென்றுள்ளார். இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, சிசெல்ஸ் ஜனாதிபதி ஜேம்ஸ் மைக்கல் விமான நிலையத்தில் வரவேற்றுள்ளார்.

# உடல் ஆரோக்கியத்தைப் பேண உணவுக்கட்டுப்பாடு அவசியமானது

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர்

(சாவகச்சேரி)

உணவை வீணாக்காது அளவாகச் சமைத்து உண்பதன் மூலம் சுற்றாடலை மாசடையாது பேணுவதுடன் உணவுப்பாவனையை கட்டுப்படுத்துவதன் மூலம் உடல் ஆரோக்கியத்தையும் பேணமுடியும் என சாவகச்சேரி நகராட்சி மன்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தெரிவித்தார்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் மன்ற உத்தியோகத்தர் ஊழியர்களுக்கிடையே நடத்தப்பட்ட நிகழ்வில் கருத்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உணவுப் பாவனையைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக மேலதிகமானவற்றை குறைக்கலாம். இதன்மூலம் உரம், கிருமிநாசினி, பாவனை குறைக்கப்படுவதுடன் அதற்காக மேலதிகமாக பயன்படுத்தப்படும் நீரின் அளவும் குறைக்கப்படும். மேலும் உணவை வீணாக்காது அளவாக தயாரித்து உண்பதன் மூலம் வீணாகிப் போகும் உணவுப் பொருட்கள் சேமிக்கப்படும்.

இன்று உலகில் எத்தனையோ மக்கள் ஒருவேளை உணவிற்காக பெரும் கஷ்டப்படுகின்றார்கள் எனவே ஒவ்வொருவரும் சிந்தித்து உணவுக கட்டுப்பாட்டை மேற்கொள்ளுவதன் ஊடாக ஆரோககியமான சமூகத்தை உருவாக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

மன்ற நிர்வாக உத்தியோகத்தர் திருமதி கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நகராட்சி மன்ற தவிசாளர் உரையாற்றினார். கருத்துரை முடிவில் மன்ற உத்தியோகத்தர், ஊழியர்களால் மன்ற வளாகம் துப்பரவு செய்யப்பட்டது. (11)

# புதிய கட்டடத்தில் பிரதேச சபை

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேச சபை தற்போது அச்சுவேலி பொதுச் சந்தைக்கருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இச்சபை முன்னர் சந்நிதி வீதியில் உள்ள தனியார் ஒருவரின் கட்டடத்தில் மிகவும் நெருக்கடியின் மத்தியில் இயங்கி வந்தது.

தற்போது சபை சொந்த இடத்தில் புதிய கட்டடத்தில் இயங்கி வரும் நிலையில் மக்கள் சிரமமின்றி சேவைகளை பெறக்கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (85)

# திருடப்பட்ட உண்டியல் பொலிஸாரால் மீட்பு

(திருநெல்வேலி)

தாவடி ஸ்ரீ அம்பலவாணவேத விநாயகர் ஆலய உண்டியல் திருடப்பட்டுக் கொண்டு சென்று கைதடிப் பகுதியில் அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரும்பாலான இவ் உண்டியல் களவாடப்பட்டிருந்தது. ஆலய வெளிமண்ட பத்தில் முன்பக்கமாக இரும்புச் சங்கிலியினால் பிணைக்கப்பட்டு பூட்டுப் போடப பட்டு மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இவ் உண்டியல் திருடர்களினால் பணத்துடன் அப்படியே தூக்கிச் செல்லப்பட்டது.

குறைந்தது மூன்று பேர்களுக்குக் குறையாமல் தூக்கப்படவேண்டிய பாரத்தைக் கொண்ட இவ் உண்டியலை துவிச்சக்கரவண்டியிலோ அல்லது மோட்டார் சைக்கிலோ கொண்டு சென்றிருக்க முடியாது. என ஊக்கிவிக்கப்படுகின்றது. விநாயகர் கோவிலின் பெயர் உண்டியலில் பொறிக்கப்பட்டிருந்ததாகக் தெரிவிக்கப்பட்டது. முன்னரும் சில தடவைகள் இவ் ஆலயத்தில இருநத உண்டியல்களில் பணம் திருட்டுப்போனது குறிப்பிடத்தக்கது. (137)

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

(அச்சுவேலி)



அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த கிராம சேவையாளர் குமாரசாமி - கதிரமலைநாதன் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ். மாவட்ட நீதிபதி எ.எஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் அச்சுவேலி மத்திய கல்லூரியின் பழைய மாணவனும், சிறந்த சமூக சேவகருமாவார்.

அத்துடன் இலங்கை சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் கூடிய பயனாளிகளை இணைத்து யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்று யாழ். அரச அதிபரால் பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (15)

# மஹோற்சவப் பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அமிர்தபாசினி சமேத சந்திரசேகர பாரிவன நாதசிவன் ஆலய வருடாந்த மஹோற்சவப்பெருவிழா எதிர் வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர் வரும் 12 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 13 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 14 ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் 15 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

பகல் திருவிழாக்கள் காலை 9.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையும் மாலை திருவிழாக்கள் இரவு 9.00 மணி வரையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# தெருவில் நடமாடும் கட்டாக்காலி நாய்கள்

(யாழ்ப்பாணம்)

குருநகர்பகுதியில் வளர்ப்பு நாய்களும், தெருவில் நடமாடும் நாய்களும் தோல் சொறிவியாதியினால் பீடிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

இவ்விதம் காணப்படும் நாய்களின் ஆரோக்கிய வாழ்விற்கான சிகிச்சை முறைகளை மாநகரசபை சுகாதாரம் பேணும் ஊழியர்களால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல வழங்கும் வண்ணம் பொது மக்களால வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (27)

# களைகட்டுகிறது றம்புட்டான் விற்பனை

(வரணி)

யாழ். குடாநாட்டில் தற்போது தென் இலங்கையில் இருந்து றம்புட்டான் எடுத்து வரப்பட்டு எங்கும் விற்பனை செய்யப்படுவதை காணமுடிகிறது.

தற்போது பத்து றம்புட்டான் 100 ரூபா வீதம் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது. பெருமளவு மக்கள் முண்டியடித்து வாங்கிச்செல்வதைக் காணமுடிகிறது.

அதேவேளை இன்னும் சில நாட்களில் பழங்கள் வரவு கூடுதலாக விற்பனைக்கு வரும் என்பதால் பழத்தின் விலை சரியக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படவாய்ப்பு உண்டென வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (180)

# முரசின் இன்றைய பலன்



02.07.2013 செவ்வாய்க்கிழமை

விஜய வருஷம் ஆனி மாதம் 18ஆம் திகதி. அஸ்வினி நட்சத்திரம் முன்னிரவு 09.57வரை. தசமித்திதி பின்இரவு 4.50வரை அமிர்தசித்தநாமயோகம்.
இராகுகாலம் 02.56 - 04.26 வரை.
சுபநேரம 10.26-11.56வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
இழுபட்டவிவாகம் நல்ல முழவுக்கு வருதல், பணம் கட்டாமையினால் தொலைபேசி துண்டிப்பு, சகோதரர் ஒருவர் நிலையால் கவலையடைதல், பயணம் பறறிய முகவர் செய்தி, புதியமனை கட்டும் எணணம் பிற்போடல, வேலிச்சண்டை காவறதுறை செல்லல், பொருளின் தரக்குறைவால் கவலை, சுவீப்பில் அதிஷ்டம்.

**ரிஷபம்**
சந்தேகம் சந்தோஷத்தைக் கெடுத்தல், ஆலய தரிசனத்திற்காக அயல்நாட்டுயோகம், சத்திர சிகிச்சை, கௌரவ பதவிக்குசிபார்சு, எழுத்தாளர் கௌரவிக்கப்படல், வளர்ப்பு பிராணி, பறவைகளினால் அயலவர்களுடன் சச்சரவு, அருமையான சந்தர்ப்பத்தைக் கை நழுவிடல். சுபகாரியச் செலவு.

**மிதுனம்**
தனியார் நிறுவனத்தில் முறுகல்நிலை, பிதாவின் உதவி கிட்டி வசந்தம், புதிய ஜீவன்உருவாதல், எலிக்கடியால் பாதிப்பு, பணப்பற்றாக்குறைவினால் வங்கித் தொடர்பு முறிதல். முதலாளி தொழிலாளர் உறவில் திருப்தி, சிறு நட்டம் பாராமல் விற்பனை செய்தல், காலாவதியான பொருளைப் பெற்று வாக்குக்கலகம், புதிய நட்பு அறிமுகம்.

**கடகம்**
தாயாரின் தேகநலம்பாதிப்பு, விலாசத்தைத் தேடி அலைதல், சொத்துப்பிரச்சினை இழுபடல், ஆவணம் தவறிப்போதல், போக்குவரத்து விதி மீறி தண்டம், நம்பியவிவாகம் கைவிட்டுப்போதல், மாமனுடன் முறுகல் நிலை, கற்பையும் மானத்தையும் காப்பாற்ற பகீரதப்பிரயத்தனம், விலங்கு குறுக்கே ஓடி சிறு விபத்து.

**சிம்மம்**
திறமைக்கு மதிப்பின்மையினால் கவலை, அலட்சியப் போக்கினால் வியாபாரமந்தம், மாதாவின் தேக சுகம் பாதிப்பு, தேர்தலில் நிற்க யோசனைவிற்பனை முகவரால் நன்மை, காப்புறுதிப் பணம் கிடைத்தல், விசா கிடைத்தல், பதவி முன்னேற்றம் பற்றிய செய்தி, மனை, வாகனம் பூமி கொள்ளும் எண்ணப்பாங்கு.

**கன்னி**
பத்தில் வியாழன் பதியை விட்டுக்கிளம்புதல், நம்பியவர் கைவிடல், புதிய இடத்தில் வியாபார முயற்சி ஏழரைச் சனியால் இடப்பக்க உறுப்பு பாதிப்பு, எதிரியினால் திருமணக் குழப்பம், தொல்லை தரும் வாகனத்தை விற்கும் எண்ணம், கலைஞர், வீரர்கள் பாராட்டும் பரிசிலும் பெறல், திடீர் சுகயீனம், சுவீப்பில் பணம்.

**துலாம்**
ஏழரைச் சனியினால் காரியங்கள் முற்றுப் பெறாமை, பிதாவின் நோய்பற்றிய அச்சம் நீங்குதல், ஆவணங்கள் பற்றியவிழிப்பு, பிணை, துணையைக் கைவிடின் விமோசனம், வழியில்பார்சல் கண்டெடுப்பு, இயந்திரக் கோளாறு பயணத்தில் இழுபாடு, நட்டமின்றி தப்பிக் கொள்ளல், சுவீப் அதிர்ஷ்டத்தினால் பணம் பெறல்.

**விருச்சிகம்**
திருமணம்புரிய இந்தியா வருகை, அட்டமத்துக்குரு இருப்பதினால்எதிரி, திருடர்பற்றிய எச்சரிக்கை, வாகனத்தால் விபத்து நேரிடல், கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலை, தொலைபேசி இலக்கம் மாறிச்சுழட்டியதில் கன்னியர் தொடர்பு, மின்சாரம் சீரின்மையால் தொழில் பாதிப்பு, பல்லுக்கொதியால் அவதி.

**தனுசு**
வெளியூர் பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேரல், பிதாவின் தேக சௌக்கியம் அபிவிருத்தி, மார்புச்சளி வருத்துதல், மூத்த சகோதரர் உதவி, கன்னியர் தொடர்பால் கவலை மறைதல், கடன் கிடைத்தல், தம்பதியர் மத்தியில் கருத்து வேற்றுமை அற்றுப்போதல், புதியன கொள்வனவு, சமாந்தரப் பயணம் விபத்தை கொண்டு வரல், புதிய ஜீவன் வருகை.

**மகரம்**
காணாமற்போனவர் பற்றிய மகிழ்ச்சிகரமான தகவல், சத்திரசிகிச்சை, குழந்தைப்பேற்றுக்கான நாட்கள் குறித்தல், நிறம் இடம் பணம் சம்பந்தமாக முற்றாக விவாகம் கைவிடல், தொழிலில் தகராறுகள், பங்கைமுறித்து தனித்தியங்க விரும்புதல், ஜாதகத்தில் பொய்யான தகவலைச்சேர்த்தல், தொழிலுக்காக குடும்பப்பிரிவு.

**கும்பம்**
பதவிசேரல், இழுபட்ட பயணம் வெற்றி, மனை, பூமி வாகனயோகம், தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தல், விருந்துபசாரம், மாமனால் உதவி, பிதாவின் தேகசுக முன்னேற்றம், அதிகாரிகளின் பாராட்டு, தொலைந்த பொருள் கிடைத்தல், அயல்நாட்டினர் வருகை, புதிய ஜீவன் பிரசவம், இரண்டாந்தாரம் பற்றிய சிந்தனை.

**மீனம்**
மார்புச்சளியினால் துன்பம், புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடல், பிரிவின் துயரம், சீதனப்பற்றாக்குறை திருமணப்பாதிப்பு, வாகனயோகம், நீர்க்கண்டம் மயிரிழையில் தப்புதல், வங்கியில் கடன்பெற விண்ணப்பம், அயலவரின் தலையீட்டினால் சமரசம், ஒற்றைத் தலைவலி, ஒருதலைக் காதலால் பிரச்சினை.

# பீற்றர்சன் வருகை

## பிளவர் மகிழ்ச்சி

(லண்டன்)

நீண்ட நாட்களுக்குப்பின் பீற்றர்சன் அணிக்கு திரும்பியுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என இங்கிலாந்து அணியின் ஆன்டி பிளவர் தெரிவித்தார்.

பீற்றர்சன் அணியில் இடம்பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. யார்க்ஷயர் அணிக்கு எதிராக 177 ஓட்டங்கள் குவித்துள்ளது மிகப்பெரிய விடயம். தற்போது வலைப்பயிற்சியில் ஈடுபட்டு வரும் இவர், அதிக நம்பிக்கையுடன் காணப்படுகிறார். எங்கள் அணிக்கு முக்கியமானவர். எப்படிப்பட்ட எதி ர ணியையும் சமாளித்து சூப்பர் ஸ்டாராக திகழ்கிறார்.

தென்னாபிரிக்காதொடரின் கடைசி போட்டியில் இவரை நீக்கிவிட்டோம். நல்ல ஆட்டத் திறனுடன் இருந்த இவரின் பங்களிப்பு இல்லாமல் போனதும் தொடரை இழந்ததற்கு ஒரு காரணம். ஒவ்வொரு அணியிலும் தனிப்பட்ட வீரர் குறித்து பிரச்சினை இருக்கத்தான் செய்யும். ஒரு தொழிலதிபருக்குக்கூட, அவரின் அலுவலகத்தில் இம்மாதிரியான பிரச்சினை உண்டு. ஏனெனில், நாம் அனைவரும் மனிதர்கள்தான். ஒவ்வொருவருக்கும் பலம், பலவீனம் என எல்லாமே இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# போராடி வென்றது மே.தீவுகள்

(கிங்டன்)

முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இந்திய அணிக்கெதிரான போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு விக்கெட்டால் போராடி வெற்றிபெற்றது.

மூன்று நாடுகள் பங்கேற்கும் ஒரு நாள் கிரிக்கெட் தொடர் மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரோகித் சர்மா 60, சுரேஷ் ரெய்னா 43, டோனி 27, தினேஷ் கார்த்திக் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரோச், டரன் சாமி தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 230 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, ஒரு புறத்தில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. இருப்பினும் ஒரு முனையில் நிலைத்து நின்று ஆடிய சார்லஸ் அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தார். இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 47.4 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் சார்லஸ் 97, பிராவோ 55, டரன் சமி 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாதேவ் மூன்று, அஸ்வின், இசாந் சர்மா தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சார்லஸ் தெரிவானார். இரண்டு லீக் போட்டிகளிலும் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இதேவேளை, தசைப்பிடிப்புக் காரணமாக டோனி களத்தடுப்பின்போது களமிறங்கவில்லை. பிராவோ காயம் காரணமாக களமிறங்காததன் காரணமாக மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு போலாட் தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது.

# டோனி இல்லாதது பாதகம்



(கிங்டன்)

நெருக்கடியான நேரத்தில் அனுபவம் வாய்ந்த கப்டன் டோனி இல்லாதது எங்களுக்குப் பெரும் பாதகமாக அமைந்துவிட்டது. அவர் களத்தில் இருந்திருந்தால் நாங்கள் வெற்றி பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாகியிருந்திருக்கும் என இந்திய அணிக் கப்டன் ஹோலி தெரிவித்தார்.

நாங்கள் துடுப்பாடியபோதுஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக இல்லை. ஆனால் பின்னர் ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக அமைந்தது. நெருக்கடியான நேரத்தில் அனுபவம் வாய்ந்த கப்டன் டோனி இல்லாதது எங்களுக்கு பாதகமாக அமைந்துவிட்டது. ஒரேயொரு விக்கெட் வித்தியாசத்தில் நாங்கள் வீழ்ந்துவிட்டோம். மேற்கிந்தியத்தீவுகள் அணி சிறப்பாக ஆடியது. நாங்கள் நெருக்கடி கொடுத்தோம். இரசிகர்களுக்கு இந்த ஆட்டம் சிறப்பான விருந்தாக அமைந்திருக்கும் என்றே நம்புகின்றேன். அடுத்து வரும் போட்டிகளில் சிறப்புற ஆடி புள்ளிப் பட்டியலில் முதலிரு இடங்களைப் பிடிக்க முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கூட்டு முயற்சியே

## வெற்றிக்கு அடிப்படை



(கிங்டன்)

இந்திய அணியுடனான ஆட்டத்தில் நம்பிக்கையுடன் செயற்பட்டு கூட்டு முயற்சியுடன் வீரர்கள் செயற்பட்டமையே வெற்றிக்குக் காரணம் என மேற்கிந்தியத் தீவு அணிக் கப்டன் போலாட் தெரிவித்தார்.

பரபரப்பான ஆட்டத்தில் நாங்கள் வெற்றி பெற்று விட்டோம். இதுபோன்ற சூழ்நிலைகளில் பல அணிகள் தோல்வி கண்டுள்ளன. எங்கள் அணி நம்பிக்கையுடன் செயலற்றபட்டுகூட்டு முயற்சியுடன் வெற்றி பெற்றமை மகிழ்ச்சி. இந்த வெற்றியால் நாங்கள் அதிக நம்பிக்கை அடைந்து விட மாட்டோம். அடுத்த போட்டியிலும் வெற்றி பெற முயற்சி செய்வோம். இந்திய அணியும் இறுதி வரை போராடியது. டோனி களத்தில் இல்லாதபோதும் ஹோலி சிறப்பாக அணியை வழிநடத்தினார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முடிந்தது முடிந்ததுதான்

(லண்டன்)

அவுஸ்ரேலிய அணியின் கிரிக்கெட் வீரர் டேவிட் வோர்னருடன் ஏற்பட்ட பிரச்சினை முடிந்துவிட்டது. தற்போது அடுத்த கட்டம் பற்றி சிந்திக்க வேண்டும் என, இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் தெரிவித்தார்.

வோர்னர் செய்த தவறுக்கு என்னிடம் மன்னிப்புக் கேட்டார். இதை ஏற்றுக் கொண்டேன். இத்துடன் பிரச்சினை முடிந்துவிட்டது.

தற்போது அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும். ஆஷஸ் தொடரில் சாதிப்பது குறித்து, கவனம் கொள்வது அவசியமானது.

இது போன்ற மிகப்பெரிய தொடர் முக்கியமானது. இதில், என்னால் முடிந்தளவு பங்களிப்பை அணிக்குக் கொடுப்பேன். தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் எங்கள் இலக்கு. அது முடியும் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹட்ரிக் கிண்ணம் வென்றது பிரேசில்



(ரியோடிஜெனீரா)

கொன்பெடரேஷன் கிண்ணம் கால்பந்து தொடரின் இறுதிப்போட்டியில் உலக சம்பியன் ஸ்பெயின் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய பிரேசில் அணி ஹட்ரிக் பட்டம் வென்று அசத்தியது.

உலகின் முன்னணி அணிகள் பங்கேற்ற கொன்பெடரேஷன் கிண்ணக் கால்பந்து போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்றது. இதன் இறுதி ஆட்டம் ரியோடி ஜெனிரோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரேசில், ஸ்பெயின் அணிகள் மோதின.

உலக சம்பியன், ஐரோப்பிய சம்பியன், ஒலிம்பிக் சம்பியன் என பல சாதனை வெற்றிகளை குவித்த ஸ்பெயின் அணி இந்த போட்டியிலும் வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பில் களமிறங்கியது. அதேநேரத்தில் சொந்த மண்ணில் கிண்ணத்தை வென்று சாதனை படைக்க வேண்டும் என்று பிரேசில் அணி களமிறங்கியது. ஆட்டம் தொடங்கியதுமே ஆடுகளம் பரபரப்படைந்தது.

2ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் பிரெட் முதல் கோல் அடித்து அணியை முன்னிலை பெறச்செய்தார். இடைவேளைக்கு முன்பு நெய்மார் மற்றொரு கோல் அடித்து இரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

இடைவேளைக்குப்பின்னர் ஆட்டம் தொடங்கிய 2ஆவது நிமிடத்தில் பிரெட் மற்றொரு கோல் அடித்து அணிக்கு வலுச்சேர்த்தார். இதையடுத்து இரு அணிகளும் கோல் எதுவும் போடவில்லை. இறுதியில் 3-0 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி வெற்றி பெற்று கொன்பெடரேஷன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

முன்னதாக நடந்த 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இத்தாலி அணி உருகுவேயை வீழ்த்தியது.

ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல் அடித்திருந்தன. கூடுதல் நேரத்திலும் இதே நிலையே நீடித்தது. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இத்தாலி 3-2 என்ற கணக்கில் வென்று 3ஆவது இடத்தை பிடித்தது.



# பொண்டிங் புதிய அவதாரம்

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தொலைக்காட்சி வர்ணனையாளராக புதிய அவதாரம் எடுத்துள்ளார்.

அவுஸ்ரேலியாவின் வெற்றிக் கப்டனாக விளங்கியவர் ரிக்கி பொண்டிங் (வயது-38). இவரது தலைமையில் அவுஸ்ரேலிய அணி இரண்டு முறை உலக கிண்ணத்தை (50 ஓவர்) வென்றது. சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்த இவர், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடருக்கு பின், ஒட்டுமொத்த கிரிக்கெட்டில் இருந்து விடைபெற உள்ளார்.

இவரை, அவுஸ்ரேலியாவை சேர்ந்த தனியார் தொலைக்காட்சி நிறுவனமான நெட்வொர்க் டென் நிறுவனம், வர்ணனையாளராக ஒப்பந்தம் செய்துள்ளது. இதனையடுத்து இவர், எதிர்வரும் டிசம்பர் மாதம் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள ”பிக் போஷ் ருவென்ரி-20 தொடரின் போது, இந்த தொலைக்காட்சி வர்ணனையாளராக புதிய அவதாரம் எடுக்கவுள்ளார்.

இதுகுறித்து பொண்டிங் கூறுகையில், வர்ணனையாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எதிர்வரும் டிசம்பர் மாதம் நடக்கவுள்ள பிக்போஷ் தொடருக்காக மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறேன் என்றார்.









யாழ். கார்மேல் முன்பள்ளிப் பாடசாலையின் சிறுவர் விளையாட்டுப் போட்டி கடந்த 16ஆம் திகதி யாழ். ஜோண்ஸ் பொஸ்கோ வித்தியாலய மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது. பந்து பொறுக்குதல், பாடசாலைக்கு ஆயத்தமாகல், மீன்பிடித்தல், வலையம் உருட்டுதல் போன்ற பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன், புனித ஜோண்ஸ் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி எம். ஜீவந்தி உட்பட பலர் கலந்து கொண்டு சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகளையும் காணலாம். (எஸ்.பி.)

## விளையாட்டுச் செய்திகள்

## பிரதாஸ், செந்தூரன் சிறப்பான செயற்பாடு
# வென்றது சுழிபுரம் விக்ரோறியா

பிரதாஸ், செந்தூரன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இலங்கைப்பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிக்கிடையிலான ஆட்டமொன்று கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பிரதாஸின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் சஜீதன் ஒரு முனையில் அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையைக் கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 32 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஜீதன் நான்கு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 57, துஷ்யந்தன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். உதிரிகளாக 25 ஓட்டங்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியினால் விட்டுக்கொடுக்கப்பட்டது. பந்து வீச்சில் பிரதாஸ் நான்கு, சிவராம் மூன்று, செந்தூரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 122 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி ஆரம்பத்தில் தடுமாறியது. இருப்பினும் செந்தூரன் பொறுப்புடன் ஆடி அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 19 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் செந்தூரன் 43, பிரசாத் 27, கோகுலராஜ் 16, சிவசங்கர் 12, கிரிசாந் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிருசாந் மூன்று, சாம்பவன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (42)

## விரைவில் 2ஆவது சுற்று ஆட்டம்

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு இரண்டின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டம் நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விரைவில் நடைபெறும் எனவும், இரண்டாவது சுற்றுத் தகுதி பெற்ற அணிகளுக்கான நிரலிடல் தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்.பி.)

## தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி
# பெரு வெற்றி

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் மகாஜனாக் கல்லூரி அணி பெரு வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், யூனியன் கல்லூரி அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தெல்லிப்பளை யூனியன்கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி குனேஸ், பிரணவன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி 41.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குனேஸ் 48 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், 12 பவுண்டரிகள் அடங்கலாக 78, பிரணவன் 76 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள் அடங்லாக 52, தனுசியன் 30 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்லாக 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரியலக்ஷன் நான்கு, லக்ஷன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். உதிரிகளாக 72 ஓட்டங்கள் யூனியன் கல்லூரி அணியால் விட்டுக்கொடுக்கப்பட்டது.

பதிலுக்கு 254 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யூனியன் கல்லூரி அணி, ஜசிந்தன், சரன்ராஜ் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 27.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றுப் படுதோல்வியடைந்தது. இதில் தரன், கிருஷாந் தலா 13, லக்சியன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜசிந்தன் நான்கு, சரன்ராஜ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். உதிரிகளாக 34 ஓட்டங்கள் மகாஜனாக் கல்லூரியினால் விட்டுக்கொடுக்கப்பட்டது. (17)

## கிளிங்ரன் சிறப்புப் பந்து வீச்சு
# சென். பற்றிக்ஸ் த்ரில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

கிளிங்ரனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் குரு நாகல் றோயல் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி த்ரில் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு இரண்டின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டமொன்று கடந்த 27ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



இதில் குருநாகல் வயம்பு றோயல் கல்லூரி அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 27.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அல்வின் ஆட்டமிழக்காது 34, சிந்துஜன், கொலின்ஸ் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அபேய திலகா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 110 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய குருநாகல் றோயல் கல்லூரி அணி கிறிங்ரனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் குருநாகல் றோயல் அணி 26.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் சண்டிமல் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிளிங்ரன் ஐந்து, கொலின்ஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலிடத்தைப் பிடித்து இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

காங்கிரஸ், மனோ கணேசனின் மேல்மாகாண மக்கள் முன்னணி போன்ற கட்சியினருக்கும் அம்முயற்சியானது சந்தர்ப்பத்தை அளிக்கும். அது மட்டுமன்றி நாடாளுமன்ற தெரிவுக்குழு என்று வரும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எனும் பெயரில் தமிழரசுக்கட்சியின் விருப்பு வெறுப்புக்கள் மட்டுமே அங்கே முன்னுரிமை பெறும். அந்நிலைமையானது உசிதமானதொன்றல்ல. அதுவே ஒரு சர்வகட்சி மாநாடாக கூட்டப்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர் விடுதலை கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் அணிகள், டெலோ, புளொட் பல தமிழ் கட்சிகள் தமிழ் மக்களின் சார்பில் குரல் கொடுக்கும் வாய்ப்புக்களை அது அதிகரிக்கும். அது சிறுபான்மை மக்களின் பன்மைத்துவ குரல்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமையாகவும் சாலப் பொருத்தமானதாகவும் அமையும். அதுமட்டுமல்ல இன்று அதிக சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் 13ஆவது சட்டத்திருத்தத்தின் ஊடாக உருவான மாகாண சபைகளை அமுலாக்குவதில் முக்கியத்து வமிக்க பாத்திரங்களை வகித்த ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போன்ற கட்சிகளுக்கும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு ஒரு சிறந்த பங்களிப்பினை இப் பேச்சுவார்த்தைகளுக்கு வழங்குவதை சர்வ கட்சி மாநாட்டு முயற்சி உறுதி செய்யும்.

# உலகின் மிகப்பெரிய மீசை!

இந்தியாவில் ராஜஸ்தானை சேர்ந்த, 47 வயதான ராம்சிங் என்பவர், மீசையை தன் உயிரை விட மேலாக கருதி வளர்த்து வருகிறார். அவரது மீசையின் நீளம் என்ன தெரியுமா? கிட்டத்தட்ட 14 அடி. 1970ஆம் ஆண்டிலிருந்து, இந்த மீசையை, அவர் வளர்த்து வருகிறார். இந்த, 43 ஆண்டுகளில், மீசையை, இவர், "ஷேவ்" செய்ததும் இல்லை "ட்ரிம்" செய்ததும் இல்லை. இவரது மீசைக்கு, "உலகின் மிகப் பெரிய மீசை" என்ற, கின்னஸ் அங்கீகாரமும் சமீபத்தில் கிடைத்திருக்கிறது. ராம்சிங் கூறுகையில், "தொடக்கத்தில், மீசையைப் பார்த்து, என் மனைவி ஆத்திரம் அடைந்தாள். தினமும், வீட்டில் சண்டை நடக்கும். தற்போது, இந்த மீசை உலக அளவில் பிரபலமாகி விட்டதால், இப்போதெல்லாம் என் மனைவிக்கு, என்னை விட என் மீசையைத் தான் ரொம்ப பிடிக்கிறது..." என்கிறார்.



# சுவிஸ் வெந்நீர் ஊற்று



இயற்கை, எத்தனையோ அற்புதங்களை உள்ளடக்கியுள்ளது. சுவிட்சர்லாந்து, குளிர்ந்த சீதோஷ்ண நிலைக்கு பெயர் பெற்ற நாடு. ஆனால், அங்கும் ஒரு சில இடங்களில், நமது கன்னியா வெந்நீர் ஊற்றைப்போல வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. பேட்ரொக்ஸ் என்ற இடத்தில், ஏராளமான வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. இங்கு, 300 ஆண்டுகளாக ஸ்பாக்கள் இயங்குகின்றன. முதல் ஸ்பா...1700ஆம் ஆண்டு தொடக்கத்தில் இயங்க ஆரம்பித்தது.

உடலில் கைகள், கால்கள் செயல் இழந்து போனவர்கள், மூட்டு வலி உள்ளவர்கள் மற்றும் உடல் சார்ந்த பல வலிகளுக்கு வெந்நீர் சிகிச்சை அருமருந்தாக உள்ளது. அதனால், மேற்கண்ட நோயாளிகளை, இந்த வெந்நீர் ஊற்றுகளில், சில நாட்கள் குளிக்கச் செய்கின்றனர் மருத்துவர்கள்.

தமினா தெர்மே என்ற இடத்தில், நான்கு நீச்சல் குளங்கள் உள்ளன. ஒவ்வொன்றும், வெவ்வேறு சீதோஷ்ண நிலை கொண்டவை. தேவைக்கு ஏற்ப, அந்தந்த நீச்சல்குளத்தில் இறங்கிக் குளிக்கலாம். இங்கு, சராசரி வெப்பம் 36 பாகை செல்சியஸ். இரண்டு மலைகளின் குறுகிய பாதை வழியே தண்ணீர் வருவதால், மூலிகை குணங்களுக்கும் பஞ்சமில்லை. பல நாடுகளையும் சேர்ந்த பிரபல பணக்காரர்கள், இங்கு அடிக்கடி வந்து தங்கி குளிப்பதுண்டு. டென்னிஸ் வீரர் பெடரர், இந்தியத் தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் தாய் உட்பட பலர், இங்கு அடிக்கடி குளிக்கச் செல்வதுண்டாம்.

# கோடம்பாக்கத்தில் சொன்னார்கள்....



வாமனன் படத்தில் சினிமாவுக்கு வந்த என்னை, காதலிப்பது போல் நடிக்கச் சொன்னபோது, காதலி வேடத்தில் என்னால் முழுதாக ஒன்றி நடிக்க முடியவில்லை. ஏதோ நடித்தேன். அதையடுத்து, தமிழ், தெலுங்கு, இந்தி வரை நடித்து விட்டேன். காதல் என்றால் என்ன என்பதையும் உணர்ந்துவிட்டேன். ஆனால், சினிமாவில் காதலிப்பது போன்று நடிக்கத்தானே முடியும். அதனால் நிஜ வாழ்க்கையிலும் மனதுக்கு பிடித்தமான ஒருவரை காதலிக்க வேண்டும் என்ற ஆசை என்னுள் ஏற்பட்டிருக்கிறது. சிலரைப்போன்று தொழிலதிபர் மோகமெல்லாம் எனக்கு இல்லை. என்னுடன் நடிக்கும் சக நடிகராக இருந்தாலும் மனதுக்குப் பிடித்தவராக இருந்தால் அவரையே காதலித்து திருமணம் செய்து கொள்வேன்.

- ப்ரியா ஆனந்த்

என்னிடம் பயிற்சி பெறும் மாணவர்களில் ஒருவன் கேட்டான்: "நல்ல படம் என்றால் என்ன சார்..?" அந்தக் கேள்விக்கு உடனடியாக பதில் சொல்ல முடியவில்லை. அந்த கேள்வி என்னைத் துரத்திக் கொண்டே இருந்தது. தூக்கம் கலைந்தது. புலம்ப வைத்தது. மறுநாளும் அந்தக் கேள்விக்கு பதில் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் அந்த மாணவன் இருந்தான். பதில் சொல்ல வேண்டிய கடமையும் எனக்கு இருந்தது.

"நல்ல சினிமா என்பது அம்மா சமைக்கும் சாப்பாடு போல் இருக்க வேண்டும்" என்றேன். எத்தனையோ வகையான சாப்பாடு கிடைக்கும்போது, வயிற்றுக்கு நல்லதை செய்யும் அம்மாவின் சாப்பாடுதானே நமக்கு பிடித்தமானது என்று பதில் சொன்னேன். எல்லா மனிதர்களிடத்திலும் ஒரு மிருகம் ஒளிந்திருக்கிறது. அந்த மிருகத்தை ஒரு சினிமா சாந்தப்படுத்த வேண்டும். பதிலுக்கு அந்த மிருகத்தை அந்த சினிமா உசுப்பி விடக்கூடாது. சாந்தப்படுத்தும் சினிமாதான் நல்ல சினிமா என்று சொன்னேன்.

- பாலுமகேந்திரா

நானும் அமெரிக்காவின் புகழ்பெற்ற ராப் பாடகர் பிட்புல்லும் இணைந்து ஓர் இசைத் தொகுப்பை ஜூலையில் வெளியிட இருந்தோம். இதற்கான ஏற்பாடுகள் நடந்துவந்தபோது சென்ற வாரத்தில் கிடைத்தது ஓர் அதிர்ச்சி. எங்கள் அல்பத்தில் இருந்த பாடல்களை இணையத்தில் யாரோ கசியவிட்டுவிட்டனர். காட்சிகளுடன் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பாடல்கள் கசிந்ததில் வருத்தத்துடன் இருந்தேன். ஆனால் மறுநாளே ஏகப்பட்ட பாராட்டுகள் போனிலும் ஈமெயில் பொக்சிலும் கொட்டிக் கிடந்ததைப் பார்த்து திக்குமுக்காடி விட்டேன்! ஒரேநாளில் 30 ஆயிரம் பேர் இந்தப் பாடல்களை கேட்டிருக்கின்றனராம். ஹா!

- பிரியங்கா சோப்ரா

"ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" என்ற என் புதிய படத்துக்காக இளையராஜாவிடம் போயிருந்தேன். இளையராஜாவுக்கு என் மீது கோபம் இருந்தது. முதலில் என்னிடம் பேசவே முடியாது என மறுத்து விட்டார். ஆனாலும் ஸ்டுடியோவை விட்டுப் போகாமல் அங்கேயே நின்றிருந்தேன். நீண்ட நேரத்துக்குப் பின் சமாதானம் ஆகி, கதையை கேட்டார். அவருக்குப் பிடித்திருந்தது. "படத்தில் எத்தனை பாடல்?" என்று கேட்டார். "பாடலே கிடையாது" என்றேன். "பின் எதற்காக என்னிடம் வந்தாய்?" என்றார். "படத்துக்கு ரீ ரெக்கோர்டிங் முக்கியம் என்பதால் உங்களிடம் வந்தேன்" என்றேன். அதற்குப் பின் சமாதானமான அவர் இசையமைக்க சம்மதம் தெரிவித்தார்.

- இயக்குனர் மிஷ்கின்

எனக்கு வெற்றியை விட தோல்விகள்தான் அதிகம். சரியான ஓர் அங்கீகாரம் இப்போது "தில்லு முல்லு" வெற்றிக்குப் பின் கிடைத்திருக்கிறது. "தில்லு முல்லு" ரீமேக் செய்யும் வாய்ப்பு கிடைத்ததை, என் பிறவிப் பயனாக கருதுகிறேன். இயக்குநர் கே.பாலசந்தர் படத்தைப் பார்த்து விட்டு வெகுவாகப் பாராட்டி பேசினார். அடுத்து எந்தப் படத்தை ரீமேக் செய்வீர்கள்? என்ற கேள்விகள் என்னைத் துரத்துகின்றன. அந்த வாய்ப்பு கிடைத்தால் கமலின் "மன்மத லீலை"யை இயக்குவேன்.

- இயக்குனர் பத்ரி

"பெண் குழந்தைகளை படிக்கவையுங்கள் உலகத்தை மாற்றுங்கள்" என்னும் கோஷத்தை நாடெங்கும் எழுப்பி பெண்கல்விக்கு ஆதரவு கோரும் நல்ல விஷயத்தை உலகம் முழுவதும் பரப்பும் தூதுவராக நியமிக்கப்பட்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது... பெண் கல்விக்கு ஆதரவு அளிப்பதற்கான காரணத்தை ஒன்பது பிரபல பெண்களிடம் கேட்டு ஆவணப்படமாக்கியுள்ளோம். அதில் என் வாழ்க்கையில் நடந்த ஒரு மெய்சிலிர்க்கும் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டிருக்கிறேன்.

- 'ஸ்லம்டோக் மில்லியனர்' நாயகி ஃப்ரீடா ஃபின்டோ

# இந்தியப் பயணமும் முடிந்தது; இனி என்ன?

- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.

கூட்டமைப்பினர் இந்தியா செல்லும் போது இருந்த நம்பிக்கையை இப்போது அவர்களிடம் காண முடியவில்லை. இந்தியா சென்று 13 ஆவது சட்டத் திருத்தத்தை மீட்டு வருகிறோம் என்று சென்றவர்கள் வந்து வெளியிடுகின்ற ஆளுக்கொரு சொதப்பல் அறிக்கைகளில் அந்த நம்பிக்கையீனம் வெளிப்படுகின்றது. “இந்தியா எங்களை கைவிட மாட்டாது” “13ஆவது சட்டத்திருத்தத்தை இந்தியா காப்பாற்றும்” “இந்தியா எமக்கு வாக்குறுதிய ளித்திருக்கிறது” என்றவாறாக மக்களை ஏமாற்றும் முயற்சி களை கூட்டமைப்பினர் கைவிட வேண்டும்.

பல இலட்சம் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற ஒரு முக்கிய பிரச்சினை ஒரு முக்கிய பயணம் ஒரு முக்கிய சந்திப்பு இவற்றின் இறுதியில் அது பற்றிய ஒரு பொறுப்பான அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளி யிடுவது என்பன போன்ற நடைமுறைகளையேனும் இன்னும் கைக்கொள்ள தெரியாமலே கூட்டமைப்பினர் இருப்பது கசப்பான உண்மை யாகும். சர்வதேச இராஜதந்திர நடைமுறைகளின் அரிச்சுவடி களையாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கற்று கொள்ள முன்வர வேண்டும். இவர்கள் இங்கே இந்திய பயணம் பற்றி வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஆளுக்கொரு கதை விட்டுக்கொண்டிருக்க டில்லியில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைபினருடனான இந்திய பிரதமரின் சந்திப்பு பற்றிய இந்திய வெளிவிவகார அமைச்சின் உத்தியோக பூர்வ அறிக்கை வெளிவந்து விட்டது. அதில் எந்த வித உறுதியும் கூட்டமைப்பினருக்கு வழங்கப்பட்டதாக தகவல் இல்லை. இலங்கையின் நடவடிக்கைகளையிட்டு கவலை கொள்வதாகவும் தமிழ் மக்களின் வாழ்வு குறித்து இந்தியா அக்கறை கொண்டுள்ளதாகவும் மட்டுமே அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பங்காளனாக இந்தியா இருந்த காலங்களை நாம் எட்டி உதைத்துவிட்டோம். இப்போ இந்தியா எமது பிரச்சினையில் பார்வையாள னாக மட்டுமே இருக்கும் நிலையில் வந்து நிற்கிறது. எனவே பொய்யான வாக் குறுதிகளை கூட்டமைப்பினரே மக்களுக்கு வழங்கி காலத்தை கடத்துவது புலனாகின்றது. அமெரிக்கா தமிழர்களின் உரி மையை வென்று தரும் என்று புலிகள் கண்ட இஸ்ரேலிய கனவும் பலிக்கவில்லை. ஐரோப்பா சிறிலங்காவுக்கு பாடம்புகட்டும் என்ற புகலிட புலிபினாமிகளின் பழிவாங்கும் ஜெனிவா கனவும் பலிக்கவில் லை. இந்தியா எம்மை கைவிடாது என்கின்ற இறுதி சம்பந்தரின் அஸ்திரமும் கையை விட்டு போய்விட்டது. என்பது இம்முறைய டில்லி பயணம் எமக்கு உணர்த்தி யிருக்கும் பாடமாகும். இந்த நிலையிலாவது கூட்டமைப் பினர் நாட்டு மக்களுடன் பேச முன்வரவேண்டும். நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதன் ஊடாக பெரும்பான்மை மக்களுக்கு சிறுபான்மை மக்களின் மனக்குறைகளை எடுத்தியம்ப வேண்டும். தென்னிலங்கை முற்போக்கு சத்திகளுடன் கைகோர்க்கும் புதியதொரு அரசியல் கலாசாரத்துக்கு தம்மை தயார் செய்ய வேண்டும். இன்று அரசில் அங்கம் வகித்தாலும் 13ஆவது சட்டதிருத்தம் மாற்றபட்டால் தமது அமைச்சு பதவியையும் துறக்க தயாராக பல இடதுசாரி தலைவர்கள் இருக்கின்ற நிலை யில் அவர்களின் குரல்களை நாம் வலுப்படுத்த வேண்டும். அவர்களையும் அழைத்து கொண்டு தென்னிலங்கை எங்கும் கிராமிய மட்டத்திலான பிரசாரங்களில் கூட்டமைப்பினர் ஈடுபட முடியும். எமது நாடு எதிர் கொள்ளும் தேசிய சிக்கல்களுக்கு எமது நாட்டு மக்களிடையேதான் தீர்வு தேட வேண்டும். ஆனால் இம்முயற் சிகள் கடுமையான உழைப்பை யும் பிரயத்தனங்களையும் வேண்டி நிற்பன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பழக்கப்படாத அரசியல் செயல்பாடுகள் அவை. வேறு உணர்வுகளை கிளறிவிடும் அறிக்கைகளை மட்டுமே நம்பி தேர்தல் வெற்றிகளை உறுதிப் படுத்திக்கொள்ளும் 60 ஆண்டு கால செக்குமாட்டு அரசியலில் மாற்றம் ஏற்பட வேண்டும். அப்படியானால் மட்டுமே கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வது சாத்தியமாகும்.

ஒரு வேளை கூட்டமைப் பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளாத விடத்து அரசாங்கம் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை கலைத்துவிட்டு ஒரு சர்வகட்சி மாநாட்டை கூட்ட வேண்டியேற் படலாம். அப்படி ஒரு முயற்சி குறித்து ஒருசில ஆலோசனை கள் மேலிடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அப்படி ஒரு சர்வ கட்சி மாநாடு கூட்டப்பட்டால் அது இன்னும் ஜனநாயக பூர்வமானதாக இருக்கும். காரணம் நாடாளு மன்றத்தில் உறுப்புரிமை குறைவாகவும், இல்லாமலு இருக்கின்ற பல சிறுபான்மை கட்சிகளுக்கு அது வாய்ப் பளிப்பதாக இருக்கும். இந்தத் தெரிவுக்குழுவில் வாய்ப்பு கிடைக்காத முஸ்லிம்

# பிழையின்றித் தமிழ் 29

- ஞானச்செல்வன் -

**தமிழில் வடசொற் கலப்பு**

தமிழில் கலந்துள்ள பல்வேறு மொழிகளுள் மிகப் பழைமை வாய்ந்த மொழி வடமொழி எனத் தக்க சமற்கிருதம். தமிழில் கலந்த சமற் கிருதச் சொற்களைத் தாம் வடமொழி, வடசொல் என இலக்கண நூலார் இயம்பினர். சங்க இலக்கியங்களிலேயே செந்தமிழோடு வடசொற்களும் விரவியுள்ளன.

“தமிழ்மொழி வரலாறு” எனும் நூல் எழுதிய சூரியநாராயண சாத்திரியார், பரிதிமாற்கலைஞர் எனத் தம் பெயரைத் தூய தமிழில் மாற்றிக் கொண்டார். அவர், அந்நூலுள் பலவிடங்களில் “தமிழ் பாஷை” என்றே குறிப்பிடுகிறார். அந்த நாளில் தமிழ்மொழி என்பதனினும் தமிழ் பாஷை என்பதே வலுப்பெற்று இருந்துள்ளது.

பரிதிமாற் கலைஞருக்குப் பின், சுவாமி வேதாசலம் எனும் பெயரை மறைமலையடிகள் என மாற்றிக் கொண்டவர் பற்றி நாமறிவோம்.

இவ்விருவர்க்கும் முன்பே, எங்கோ இத்தாலியில் பிறந்து தமிழ்நாட்டில் சமயப் பரப்புரை செய்ய வந்த கொன்ஸ்டான்டைன்டின் ஜோசப் பெஸ்கி எனும் கிறித்துவப் பாதிரியார் தம்பெயரை முதலில் தைரிய நாதசாமி என்று வைத்துப் பின்னர் தூய தமிழில் வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்ட வரலாறும் ஈண்டு நினைக்கத்தக்கது.

தமிழில் காலம் காலமாகக் கலந்துள்ள எண்ணற்ற வடசொற்களுள் சில பலவற்றுக்குக் கீழ் வரும் பட்டியலில் தமிழ்ச் சொற்கள் தந்துள்ளோம். இவற்றுள் பல சொற்கள் இப்போது எழுத்திலும் பேச்சிலும் ஆளப்பட்டு வருகின்றன.



| வடசொல் | தமிழ்ச் சொல் |
|---|---|
| கிரமம் | ஒழுங்கு |
| கிராமம் | சிற்றூர் |
| சக்தி | ஆற்றல் |
| சகோதரன் | உடன்பிறந்தான் |
| சந்நிதி | திருமுன்(பு) |
| சபதம் | சூளுரை |
| சந்தோஷம் | மகிழ்ச்சி |
| ஜலதோஷம் | நீர்க்கோவை |
| சாபம் | கெடுமொழி |
| சிநேகம் | நட்பு |
| சுத்தம் | தூய்மை |
| சுபாவம் | இயல்பு |
| சேவை | தொண்டு |
| தாகம் | வேட்கை |
| நிபுணர் | வல்லுநர் |
| பகிரங்கம் | வெளிப்படை |
| பரிகாசம் | நகையாடல் |
| பந்தபாசம் | பிறவித்தளை |
| பிரசாரம் | பரப்புரை |
| மந்திரம் | மறைமொழி |
| மிருகம் | விலங்கு |
| முகூர்த்தம் | நல்வேளை |
| யுத்தம் | போர் |
| ரகசியம் | மறைபொருள் |
| வயது | அகவை |
| வாகனம் | ஊர்தி |
| வாதம் | சொற்போர் |
| விகிதம் | விழுக்காடு |
| விக்கிரகம் | திருமேனி/செப்புச்சிலை |
| வேதம் | மறை |
| வேகம் | விரைவு |
| ஜாதகம் | பிறப்புக் கணக்கு |
| ஜெபம் | தொழுகை |
| ஜென்மம் | பிறவி |
| ஜோதிடன் | கணியன் |
| ஸ்தாபனம் | நிறுவனம் |
| க்ஷேத்ரம் | திருத்தலம் |
| யாகம் | வேள்வி |
| போகம் | நுகர்வு |
| மோகம் | விருப்பு |

**வழக்கில் வழுக்கியவை:**

“முழிக்கிற முழியைப் பார், திருட்டுமுழி” என்று பேசுகிறார்கள். “ஏன்ரா முளி முளியென்று முளிக் கிறாய், ஒண்டும் விளங்கேல்லையா?” என்று வினவுகிறார்கள். இந்த முழியும், முளியும் சரியானவையா? அல்ல. விழிக்கிற விழியைப் பார், விழி விழி என்று விழிக்கிறாய் என்று இருக்க வேண்டியவை இப்படி பேச்சு வழக்கில் வழுக்கி (தவறாக) உள்ளன.

“ஓரே நாத்தமடிக்குது. சகிக்க முடியவில்லை” இந்த நாத்தம் என்பது நாற்றம் என்பதன் வழுக்கல். அவ்வாறே பீத்தல் என்றால் பீற்றல் (பீற்றுதல்) - பெருமை பேசுதல் என்பதன் வழுக்கல். இப்படி நம் வழக்கி லுள்ள வழுவுடைய சொற்களையும் அவற்றில் திருத்தமுடைய சொற்களையும் அடக்கி ஒரு சிறு பட்டியலில் தருகிறோம்.

| வழு | திருத்தம் |
|---|---|
| அடமழை | - அடைமழை |
| அடமானம் | - அடைமானம் |
| உடமை | - உடைமை |
| உத்திரவு | - உத்தரவு (ஆணை) |
| ஊரணி | - ஊருணி |
| ஏமாந்தான் | - ஏமாறினான் |
| ஒருவள் | - ஒருத்தி |
| ஒருத்தன் | - ஒருவன் |
| கத்திரிக்கோல் | - கத்தரிக்கோல் |
| கிராணம் | - கிரகணம் |
| குத்துதல் | - (நெல்)குற்றுதல் |
| கேக்கிறார் | - கேட்கிறார் |
| கோடாலி | - கோடரி |
| சம்மந்தம் | - சம்பந்தம் (தொடர்பு) |
| சுவற்றில் | - சுவரில் |
| சோத்துப்பானை | - சோற்றுப்பானை |
| திரேகம் | - தேகம் (உடல்) |
| தொந்திரவு | - தொந்தரவு (தொல்லை) |
| தேவனாதன் | - தேவநாதன் |
| நிலயம் | - நி[illegible]ம் |
| புத்து | - புற்று |
| புண்ணாக்கு | - பிண்ணாக்கு |
| புழுக்கை | - பிழுக்கை |
| வயறு | - வயிறு |
| வரவு சிலவு | - வரவு செலவு |
| வலது, இடது | - வலம், இடம் |
| வெய்யில் | - வெயில் |
| வெண்ணை | - வெண்ணெய் |
| வைக்கல் | - வைக்கோல் |
| களட்டி | - கழற்றி |
| குசும்பு | - குறும்பு |
| சொலவடை | - சொல் வழக்கு |
| சுறண்டு | - சுரண்டு |
| சுளட்டி | - சுழற்றி |

**ஞானச்செருக்கு:**

“திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால் செம்மை மாதர் திறம்புவ தில்லையே” என்றான் மகாகவி பாரதி. ஆழ்ந்தகன்ற அறி வினால் வரும் பெருமிதத்தையே பாரதி ஞானச் செருக்கென்றான். மெய்யறிவுத் திறமுடையார் செருக் குடன் இருப்பது இயற்கையே. நம் தமிழறிவு பெருகினால் பிழைகள் நீங்கும் பிழைகள் நீங்கிடில் தமிழ் மொழி சிதையாமல் செழிக்கும். மொழி செழிப்புற்றால் தமிழர் வாழ்வு வளம் பெறும். “நைந்தாய் எனில் நைந்து போகும் என் வாழ்வே” என்றார் பாவேந்தர். “நன்னிலை உனக்கென்றால் எனக்கும்தானே” என்றும் அவர் தமிழோடு பேசுகிறார். இந்த அடிப்படை நினைவை உணர்வை நாம் எப்போதும் உள்ளத்தில் கொள்ள வேண்டும்.

# அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ்...

## குருநகர் மக்களின் தேவைகள்குறித்து விரிவான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் குருநகர் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலய சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 5 கணனிகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அன்பளிப்புச் செய்துள்ளார்.



புனித ஜேம்ஸ் மகாவித்தியாலய மண்டபத்தில் அப்பகுதி மக்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கடற்றொழிலாளர்கள் அதிகமாக வாழும் அப்பகுதியில் தொழிலாளர்கள் எதிர்நோக்கிவரும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறிப்பாக கடற்கரை வீதி உள்ளிட்ட உள்ளக வீதிகளின் புனரமைப்பு, குருநகர் ஆற்றுவாய் பகுதியை ஆழமாக்கல், வீதி விளக்குகளை பொருத்துதல், காணிகளுக்கான உரிமங்களை பெற்றுக் கொடுத்தல், குருநகர் துறைமுக புனரமைப்பு, வெளிச்ச வீடு அமைத்தல், தங்குதொழில் மற்றும் மாற்றுத் தொழில் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இதில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கென கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன்போது இழுவைத் தொழில் நடவடிக்கையால் ஏற்படும் பாதிப்புக்களை தெளிவுபடுத்தியதுடன் அதற்குப் பதிலாக மாற்றுத் தொழில நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படுமென்றும், துறைமுகப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம் தொடர்பில் தாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

மேலும் பாலைதீவு, இரணைதீவு, கச்சதீவு, கற்கடதீவு ஆகிய தீவுகளில் தங்கு தொழில் நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு கடற்றொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்ட போது அதற்கு பாலைதீவில் உடனடியாக தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் எனவும் ஏனைய தீவுகளில் தங்கு தொழில செய்வது தொடர்பிலும் வெளியிடங்களில் தொழில் செய்வது தொடர்பிலும் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி தீர்வு பெறறுத் தரப்படுமெனவும் தெரிவித்தார்.

குருநகரிலுள்ள 30 விளையாட்டுக் கழகங்களுக்கு உதைபந்து உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை அமைச்சர் அவர்கள் இதில் வழங்கி வைத்தார். இதன்போது யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன், யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, வடக்கின் வசந்தம் திட்டப்பணிப்பாளர் குணசீலன், யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் கணேசமூர்த்தி, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி ஆகியோர் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## நெடுந்தீவில் குதிரை இனங்களை பாதுகாக்க நடவடிக்கை



நெடுந்தீவில் வாழும் குதிரை இனங்களை பாதுகாத்து பராமரிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது. யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது நெடுந்தீவில் நீண்டகாலமாக வாழ்ந்துவரும் குதிரை இனத்தை பாதுகாத்து அதனை பராமரிப்பது மட்டுமன்றி அவ்வினத்தை மேலும் வளர்த்தெடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதற்காக புற்றரைகளை வளர்ப்பது, குதிரை லாயங்களை அமைப்பது குறித்த குதிரை இனங்களை மேலும் விருத்தி செய்வது தொடர்பாகவும் இதனூடாக நெடுந்தீவின் இயற்கை வளத்தை பாதுகாத்து பராமரிக்கும் வகையில் மரங்களை நடுகை செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை மழைநீர் சேகரிப்பு மற்றும் உல்லாசப்பயணிகளை கவரும் வகையில் அங்குள்ள வரலாற்று சின்னங்களை பாதுகாத்து பராமரிப்பது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது, மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் சிறிபாலசுந்தரம், நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி, நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் றெக்சியன் உள்ளிட்ட விவசாய மற்றும் கால்நடை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## கலந்துரையாட அழைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் சுகாதார தொண்டர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் இதுவரை கா்லமும் தொண்டர்களாக கடமையாற்றி நிரந்தர நியமனம் வழங்கப்படாதவர்களுக்கு நியமனம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஜனநாயகக் கட்சி முல்லை மாவட்ட அமைப்பாளர் அன்ரனிப்பிள்ளை ஜெயராச் கிருபன் அழைப்பு விடுத்துள்ளார்.

உப்புமாவெளி அளம்பில் வீதி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கும் பின்வரும் 0772300818, 0772852886 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கும் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## வருடாந்த பெருவிழா

(நவாலி)

யாழ்ப்பாணம் நவாலி சென்.பீற்றர் தேவாலயத்தின் வருடாந்த பெருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனி இடம்பெறும்.

ஆலய பவனி இடம் பெறும் ஆலய பங்குத்தந்தை சோதிநாதர் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும். (21)

## ஆணின் சடலம் மீட்பு

பாணந்துறையில் ஆணொருவரின் சடலத்தை நேற்று காலை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை, பாடசாலை ஒன்றுக்கு அருகில் கார் ஒன்றிலிருந்து இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நுகேகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் நாடாளுமன்ற ரீதியில் விபரம் திரட்டல்

பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் குறித்த விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் காணப்படும் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் குறித்த விபரங்களை உடனடியாக அறிவிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழு கோரியுள்ளது.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளினால் நாட்டில் அதிகரித்துள்ள விபத்துக்களை தொடர்ந்து இவ்விடயம் தொடர்பில் தலையிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், இலங்கையில் காணப்படும் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளின் விபரங்கள் அடங்கிய அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சிடமும் புகையிரத திணைக்களத்திடமும் மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் வைத்தியர் பிரதீபா மஹனமவெவ கோரியுள்ளார்.





கிளிநொச்சி நகரப்பகுதியிலுள்ள ஏ-9 வீதி அகலமாக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது வாகனங்கள் தரித்து நிற்பதற்கான தரிப்பிடப்பகுதிகளுக்கும், துவிச்சக்கரவண்டிகள் பயணம் செய்வதற்கான பகுதிகளுக்கும் வெள்ளை நிறத்தில் வீதியில் குறியீடுகள் எழுதப்பட்டுள்ளதனைப் படங்களில் காணலாம். (21)

# இ.போ.ச. கிளிநொச்சி சாலையின் தேவைகள் குறித்து ஜனாதிபதிக்கு மனு

(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் இலங்கை போக்குவரத்து சபை (வடக்கு)கிளிநொச்சி சாலை போதிய வசதிகள் இன்றிய நிலையில் காணப்படுகிறது. எனவே இச்சாலைக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்தக்கோரி சிறிலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து ஊழியர்சங்கம் ஜனாதிபதிக்கு விண்ணப்பமனுவொன்றை அனுப்பி வைத்துள்ளது. இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி சாலையில் பணிபுரிவதற்கான சாரதி காப்பாளர்கள், பொறிவலர்களை கிளிநொச்சி மாவட்டத்தில் பெற்றுக் கொள்ளவேண்டும் . இத்துடன் பொறிவலர்களும்,சாரதி காப்பாளர்களும் போது மானதாக இல்லை.மேலும் கிளிநொச்சி சாலையில் பணி யாற்றும் ஊழியர்கள் இளைப்பாறுவதற்கான இடம்.மலசல கூடவசதிகள்,கட்டடவசதிகள் என்பனவும் மின் விசிறி, விளக்குகள் என்பன ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் இல்லை. அத்துடன் ஊழியர்கள் பொருட்களை வைப்பதற்கு அலுமாரி வசதிகளும் இல்லை.

இங்கு பொறியியல் பகுதியும் பேருந்துகளை சுத்தம் செய்யும பகுதியும் சிறப்பாக செயற்படக்கூடிய வசதிகள் இல்லை. அத்துடன் மழைக்காலத்தில் பேருந்துகளைச் சரிபார்ப்பதற்கான கொட்டகை வசதியும்,பேருந்துகளின் கீழ்ப்பாகம் சரியான முறையில் பார்வையிடுவதற்கான தாம் வசதியும் சுத்திகரிப்பு நிலையமும் கம்மாலை பகுதியும் இல்லை.

எரிபொருள் நிரப்புவதற்கு இடவசதிஇருந்தும் சீர்செய் யப்படவில்லை.அத்துடன் தண்ணீர் தாங்கி பைப்லைன் வசதிகளும் இல்லை. மேலும் கிளிநொச்சி சாலையில் பேருந்து களை நிறுத்தி சேவை செய்வதற்கான இடமும் கொட்டகை வசதியும் எம்மிடம் இல்லை. பேருந்து நிழற் குடைகள்.பேருந்து தரிப்பு நிலையம் என்பன இல்லை. இச்சாலை புதிதாக ஆரம்பித்த போது ஏனைய சாலைகளில் பாவித்த பேருந்துகளாக மொத்தம் 16 பேருந் துகள் தரப்பட்டன. அததுடன் எமக்கு யுத்தம் முடிவடைந்து 4ஆண்டு காலப் பகுதியில் ஒரு பேருந்து மட்டுமே தரப்பட்டது. எனினும் எமது சுய முயற்சியால் புதிய2பேருந் துகள் கொள்வனவு செய்யப்பட்டு தூர தேச பயணத்தில் ஈடுபடுத்தப்பட் டது. மேலும் கிளிநொச்சியிலிருந்து வெளிமாவட்டங்களுக்கான சேவை யில் ஈடுபடுவதற்கான 2கதவு கொண்ட 12பேருந்துகள் தேவையாகவுள்ளன. அத்துடன் உள்ளூர் சேவையை மேம் படுத்துவதற்கு பாடசாலை மாண வர்களுக்கான பாடசாலை சேவை செய்வதற்கும் யுத்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களில் வலுவிழந்தோரு க்கான அன்றாட தேவையை நிறை வேற்றுவதற்கான புதிய ஒரு கதவு கொண்ட 15பேருந்துகள் தேவை யாகவுள்ளன.

கிளிநொச்சி சாலையில் கடமை யாற்றும் ஊழியர்களின் கொடுப்பன வாக ஒரு தொகை பணம் ஒவ்வொரு ஊழியர்களுக்கும் வங்கியில் குறிப் பிட்ட திகதியில் வைப்பில் இடப் படுகிறது. மிகுதிக்கொடுப்பனவு வரு மானத்தின்மூலமே வழங்கப்படு கிறது. புதிய பேருந்துகளை தரும் போது ஊழியர்களின் கொடுப்பனவு கள் மாதத்தில் ஒரே திகதியில் கொடுக்கமுடியும்.மேலும் கிளி நொச்சி சாலைக்கு தரப்பட்ட பேருந்து களில் 10 பேருந்துகள் தான தற்போது சேவையில ஈடுபடுத்தக்கூடியதாக உள்ளது. அத்துடன் குறைந்த பேருந்து களுடன் குறைந்த செலவில் கூடிய வருமானம் கொண்ட முதற்தர சாலை யாக கிளிநொச்சிசாலை முன்னு ரிமை பெற்றுள்ளது.எனவே இலங்கை போக்குவரத்து சபை வடக்கு கிளி நொச்சி சாலை மட்டும் தான் கட்ட டவசதி,பேருந்து நிலைய வசதி புதிய பேருந்து வசதிகள் அனை த்தும் அற்ற நிலையில் கவனிக்கப் படாமல் இருப்பது வருந்தப்படக் கூடியதாக உள்ளது. ஆகவே இதனை சீர் செய்து ஏனைய அரச நிறுவனங் களுக்கு ஒப்பாக எமது கிளிநொச்சி சாலையை உயர்த்துவதற்கான நட வடிக்கைக்கு ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் என குறிப் பிடப்பட்டுள்ளது. (109)

# பாடசாலை கட்டடம் திறப்பு



(வவுனியா)

வவுனியா அறுகம்புல்வெலிய அரசினர் சிங்கள கலவன் பாடசாலையில் புதிய கட்டடம் அண்மையில் திறந்து வைக் கப்பட்டது. வட மாகாண ஆளுநர் ஜீஏ.சந்திரசிறி பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு கட்டத்தினை திறந்துவைத்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் என்றிப் செயற் திட்டத்தின் கீழ் இக்கட்டடம் கட்டடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்ட பிராந்திய ஆணையாளர் ஐ.எஸ். எம்.மொகைதீன், என்றிப் செயற்திட்டத்தின் பிரதிநிதிகள், வவு னியா தெற்கு கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோம ராஜா, கல்வி உயர் அதிகாரிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# பிரதேச செயலக ஊழியர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ பயிற்சி





வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலக ஊழியர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலை யத்தின் வவுனியா கிளையினால் அனர்த்த முகா மைத்துவம் தொடர்பான பயிற்சி நெறிகள் வழங் கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி பிரதேச செயலகத்தின் கேட் போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை உதவி பிரதேச செயலாளர் வி. ஆயகுலன் தலைமை யில் இடம்பெற்ற இப் பயிற்சி நெறியின் போது அரச ஊழியர்கள் அனர்த்தத்தின் போது மேற் கொள்ள வேண்டிய நடைமுறைகள், அனர்த்தத் தில் மக்களுக்கு பணியாற்றுவது, அனர்த்தத்தின் போது முதலுதவிகள் வழங்குதல் போன்ற பயிற்சிகள் இதன் போது தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை அனர்த்த முகாமைத்துவ நிலை யத்தின் வேலைத்திட்டங்கள் அதற்கு பொது மக் களினால் வழங்கப்பட வேண்டிய பங்களிப்புகள் என்பன தொடர்பிலும் விழிப்புணர்வு செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இப் பயிற்சி நெறிகளை அனர்த்த முகாமைத் துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா, இலங்கை செஞ்சி லுவை சங்கத்தின் உத்தியோகத்தர் கே. ராஜ்சங் கர் ஆகியோர் வழங்கியிருந்தனர். (40)

# பதிவிறக்கப் பெட்டகம்

சொன்னால் மறுக்கிறார்கள்
எழுதினால் நிராகரிக்கிறார்கள்
தாக்கினால் தாங்குகிறார்கள்
சும்மா இருந்தால் தாக்குகிறார்கள்
அற்புத உலகம்
அற்புத மாக்கள்
– ஆத்மாநாம்

கடல் தொட்ட பேரலை
கடல் திரும்பி
தன்னுருவம் இழந்தது
உருவமிழக்கு முன்பே
கால்கள் நனைத்தது
மனமோ ஈரமானது
கடல் சென்ற பேரலை
கடலாய் இருக்கிறது
கடல்
கரை தொடும் பல
அலைகள் கொண்டது
– ஷாஅ

ஆறு
மழையின் அடியில் உருவாகிறது
மரங்களின் வழியே செல்கிறது
ஒவ்வொரு துளியும் அதற்கு வழி செய்கிறது
ஒளிமிக்க மின்னல்
நீரின் போக்கைச் சுட்டிக் காட்டுகிறது
அதன் எல்லையில்லாப் பரப்பு
அந்தரங்கமானது
நகரை நோக்கி
கட்டு மீறி நகர்கிறது
இடையிலாது போய்க்கொண்டே
அதுவே புனிதம்.
– ஹோமிரோ அரிட்ஜிஸ்

கலங்காதிரு பிறையே!
உனக்குள்தான்
பூரணச் சந்திரன்
புதைந்திருக்கிறான்.
– மகாகவி இக்பால்

நின்று சலித்த என்
தோட்டத்து மரமொன்று
பின்னிரவில்
என் பிரியத்தின் இதம் வேண்டி
மெல்லப் படியேறி வந்தது
மரங்கள் நடப்பது
சாத்தியமில்லையென
அறிந்திருந்ததால்
ஒரு விபரீதக் கனவென்று திகைத்து
வரவேற்கத் தாமதித்துவிட்டேன்
ஆயிரம்
இலை நுனிகளால்
வேர் நுனிகளால்
புறக்கணிப்பின்
துக்கம் ததும்பி
படியிறங்கிப் போகிறது
என் தோட்டத்து மரம்
– மனுஷ்யபுத்திரன்

அடிக்கடி பார்க்க முடிகிறது
யானையைக் கூட
மாதக் கணக்காயிற்று
மண்புழுவைப் பார்த்து.
– கல்யாண்ஜி

காற்றின் கிளையேறி
திகுதிகுவென பரவின
எரியும் பிரச்சினைகள்
நாடி ஒடுங்கிற்று
வார்த்தை பூதம்
– தேவதச்சன்

முந்நூறாண்டுகள்
உழுதோம்
எங்கள் நிலத்தில் அவர்க்கு
இனியும்
உழுவோம்
அவர்கள் நிலத்தை அவர்க்கே.
– திருமாவளவன்

யாருமில்லை நீர்நிலையில்
இரவும் நிலவும் குளிரும் தண்ணீரும்
சொட்டு சொட்டும் மரங்களின் ஈட்டமும்
நடுச் சாமத்தில் புரியாத கவிதைக்குக்
குழைத்தன சொல்லின் மாட்சியை.
– ஞானக்கூத்தன்

டோலக்கின்
அசைவுகளில்
தோற்றது
மொழி.
– ரவி சுப்பிரமணியன்

வெள்ளைத் தாளில்
கீழ் இடது மூலையில்
நான்கு வரிகள்
கவிதை
– பேயோன்

உச்சிமரக் கிளையில் நின்று
உயிர்வேரை அறுத்தவன் நான்
பச்சைஇளங் கொழுந்தைக் கிள்ளிப்
பாழ் நெருப்பில் எறிந்தவன் நான்
நூறு வகை நோய் கொடய்யா
சாகும்வரை அழ விடய்யா
– மாயவநாதன்

நான் இந்த மின்விளக்கின்
பொத்தானை அழுக்குமளவு
வளரும்வரை,
எனக்கு இரு உலகங்கள்
இருந்தன.
மேஜை இருக்கும்
இடங்களிலெல்லாம், நான்
இன்னொரு உலகிற்குச்
செல்ல முடியும்.
வகுப்புகள் நடக்கும்
உலகுக்குக் கீழே
தீனி தின்னும் உலகம்.
பள்ளி கிளம்பும்
உலகுக்குக் கீழே
விடுமுறைகளின் உலகம்.
அலுவலகமாக,
கடைத்தெருவாக,
வீடாக மாறக்கூடிய
உலகங்கள்.
இனி, மாற்று உலகம்
இல்லாத உலகில்
எப்படி வாழ்வது?
– ச.அனுக்ரஹா

வானவில்லை வானில்
பார்க்கும் போதெல்லாம்
என் இதயம் சிலிர்க்கிறது.
அப்படித் தான் என்
வாழ்க்கை ஆரம்பித்த
குழந்தைப் பருவத்தில் இருந்தது.
வளர்ந்த பிறகு இப்போதும்
அப்படித்தான் இருக்கிறது.
இதே போல் என்
வயோதிக காலத்திலும்
இருக்கட்டும்.
அப்படி இல்லா விட்டால்
நான் இறந்தே போவேனாக!
குழந்தையே மனிதனின் தந்தை!
இயற்கையின் அழகை
ரசிக்கும் பக்தனாக,
என் வாழ்நாள் அனைத்திலும்
இருக்கவே
நான் ஆசைப்படுகிறேன்.
– வேட்ஸ்வொர்த்




# சிறுவர் ஆன்மிக உணர்விற்கு

## தினசரி கடமைகள்

ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் சூரியோதயத்துக்கு முன் விழித்தெழுந்து படுக்கையிலிருந்தபடி இரண்டு உள்ளங்கைகளையும் பார்த்து துர்க்கா, லக்மி, சரஸ்வதி தேவியாரை நினைத்துக்கொள்ளவேண்டும். பிரம்மா விஷ்ணு, நவக்ரஹ தேவதைகளையும் நள மகாராஜன், தமயந்தி, யுதிஷ்டிரர், சீதா தேவி, திரௌபதி போன்ற உத்தமர்களையும் நினைத்து இன்று நல்ல பொழுதாக இருக்க வேண்டுமென பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும். பிறகு நித்திய கடன்களைக் கழித்து, கை, கால்களை அலம்பிக் கொண்டு, திருநீறு அணிய வேண்டும். ஸ்திரீகள் குங்குமம் அணிந்து வாசலில் சாணி ஜலம் தெளித்து சுத்தம் செய்து கோலம் போட வேண்டும். பூஜை அறையில் தீபம ஏற்றவேண்டும். பிறகு வீட்டுக் காரியங்களைச் செய்யலாம்.

குப்பைகளை வீட்டின மூலையில் ஒதுக்கக்கூடாது. வெளியில் கொட்ட வேண்டும். வாரம் ஒரு முறை ஒட்டடை அடிக்க வேண்டும். வருஷம் ஒரு தடவை சுவர்களுக்குச் சுண்ணாம்பு பூசி சுத்தமாக வைத்துக்கொள்ள வேணடும்.

ஸ்நானம் : ஓடும் நதியில் நீர் வரும் திசையை நோக்கி ஸ்நானம் செய்வது விசேஷம். அல்லது குளம், கிணறு, குழாய் ஆகியவற்றில் செய்யலாம். உடல் நலம் இல்லாதவர் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். அதுவும் முடியாதவர் புரோஷணம் செய்து (நீரை லேசாகத் தெளித்துக் கொள்வது) ஈரத்துணியால் துடைத்துக் கொணட உலர்த்திய துணியை அணிய வேண்டும். ஈரத்துணியைக் கட்டிக்கொள்ளக்கூடாது. அப்படி நேர்ந்தால் ஏழு முறை காற்றில் உதறிவிட்டு உடுத்த வேண்டும்.

பெண்கள் தினந்தோறும் கழுத்துவரை ஸ்நானம் செய்தால் போதும், தலைக்கு ஸ்நானம் அவசியமில்லை. விசேஷ நாட்களிலும் தீட்டு போகும் போதும் தலை ஸ்நானம் முக்கியம்.

நெற்றியில் விபூதி, குங்குமம், சந்தனம் இட்டுக் கொண்டு சூரியனை நோக்கி மூன்று முறை அர்க்யம் கொடுத்துவிட்டு தம் இஷ்ட தேவதையின் நாமாவை 108 தடவை ஜபம் செய்ய வேண்டும். சூரிய நமஸ்காரம் 12 முறை செய்தபின் விநாயகர் முதல் ஆஞ்ஜநேயர் வரை ஸ்தோத்திர பாராயணம் செய்யலாம். பிறகு காலை உணவு உண்டபின் பாடசாலை, அலுவலகம், வியாபார என்று வெளியே செல்லலாம். வெளியே செல்லும் போது விஷ்ணுவை பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும்.

மத்தியானம் உணவுக்கு முன் கை, கால் கழுவி சிறிய அளவில் வீட்டு வழக்கப்படி கொஞ்சநேரம் அனுஷ்டானம் அல்லது வழிபாடு செய்ய வேண்டும். உண்ணும்போது அன்னபூர்ணாவை நினைத்து, ‘ஹே தேவி, எனக்கு நல்லபுத்தி, ஞானம், சிந்தனையைத் தரவேண்டும்’ என்று பிரார்த்தித்து உட்கொள்ள வேண்டும். பின்னர் நன்றாகக் கை, கால், வாய் கழுவ வேண்டும். பிறகு தங்கள் பணியைத் தொடரலாம்.

மாலை வீடு வந்ததும் கை, கால் கழுவி சுவாமி அறையில் தீபம் ஏற்றி வைத்துவிட்டு சந்நிதியில் தோத்திரம், பஜனை செய்து பிரார்த்திக்க வேண்டும். இரவு உணவுக்குப் பின் தூக்கத்துக்கு முன் கெட்ட ஸ்வப்னம் வராமலிருக்க நல்ல தூக்கம் வர ஶ்ரீ மகா விஷ்ணுவையும், அனுமாரையும் பிரார்த்திக்கவேண்டும்.

இப்படியாகத் தினந்தோறும் நித்தியக் கடமைகளைச் செய்ய வேண்டும். தங்கள் இஷ்ட தேவதையின் திருநட்சத்திரம், •திதி அன்று ஒருவேளை சாப்பாடு, இரவு பலகாரம் என்று விரதம் இருக்க வேண்டும். அதேபோல் ஏகாதசி விரதமும் முக்கியம். ஏகாதசி, சனிக்கிழமை நாட்களில் இரவு ஒருமணி நேரம் பஜனை செய்வது நல்லது.

வீட்டிலுள்ளவர் தங்கள் குழந்தைகளையும் சிறுவயது முதல் இதே வழியில் பழக்க வேண்டும்.

## நினைக்கப்படவேண்டியவர்கள்



இரவீந்திரநாத் தாகூர்
இறைவன் இருக்குமிடம்



அறிஞர் அண்ணா
மனித நேயத்துக்கு வரைவிலக்கணம்



சிறுவர் திறன் விருத்திக்காக தினமுரசு முன்னெடுக்கும் சிறுவர் முரசு ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் உங்கள் அறிவியலிற்கு விருந்தளிக்கும். இச் சிறுவர் முரசில் உங்கள் ஆக்கங்களும் பிரசுரமாக வேண்டுமெனில் சிறுவர் முரசு, தினமுரசு, இல 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சித்திரங்கள் கவிதைகள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் என தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

Help the car find the way through the maze to the finish line.







1) *Who is your favourite cricketer today?* ..........................................................

2) *In which game do you find the net?* ..........................................................

3) *Name two indoor games.* ..........................................................

4) *Name two outdoor games.* ..........................................................

5) *Which is your favourite game.* ..........................................................

## *Fill in tha blanks correctly with one of the following words.*

*(1) ........................................ April we went (2) ........................................ a pilgrimage (3) ........................................ Kandy. We traveled (4) ........................................ home (5) ........................................ van (6) ........................................ my uncle and his family. We traveled (7) ........................ eight o'clock and reached Hatton (8) ........................................ the morning.*

*By, with, to, at, in, on, from*

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

## உயிரியல்

1. C,H,O,N ஆகிய மூலகங்களை மாத்திரம் கொண்ட சேர்வையினைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?
(1) மோல்றோசு (2) கைற்றின்
(3) ஈமோகுளோபின் (4) டீ ஒக்சி ரைபோசு வெல்லம்
(5) RNA

2. பின்வரும் இயல்புகளுள் விலங்கு இராட்சியத்தில் அடங்கும் அங்கிகளுக்கு பொருத்தமற்ற இயல்பு,
(1 ஒழுங்கையும் ஒழுங்கமைப்பையும் கொண்டிருத்தல்.
(2) இனப்பெருக்கத்தினை மேற்கொள்ளுதல்.
(3) கலச்சுவருடைய கலங்களைக் கொண்டிருத்தல்.
(4) குறித்த சூழலுக்காக இசைவாக்கம் அடைந்திருத்தல்.
(5) வளர்ச்சியும் விருத்தியும் காணப்படுதல்.

3. இயுக்கரியோட்டா கலம் ஒன்றில் DNA உடன் Histone வகைப் புரதங்களையும் கொண்ட புன்னங்கங்களின் சேர்வு,
(1) இறைபோசோம்,கரு,இழைமணிகள் மாத்திரம்.
(2) இழைமணிகள், பச்சையுவுருமணிகள் மாத்திரம்.
(3) இழைமணிகள் மாத்திரம்.
(4) கரு மாத்திரம்.
(5) புன்மையத்தி, கரு மாத்திரம்.

4. அதிகூடிய வியத்தமடைந்த புணரித்தாவரத்தை கொண்ட தாவரம்/தாவரக்கூட்டம் பின்வருவனவற்றுள் எது?
(1) *Marchantia* (2) *Nephrolepis* (3) Lycopyta
(4) *Pinus* (5) *Musa*

5. விலங்கு இழையங்களில்,அயற்கலங்களுக்கு இடையே பதார்த்தங்களையும், சமிஞ்கைகளையும் கடத்துவதற்காக காணப்படும் பௌதீக கட்டமைப்பு பின்வருவனவற்றுள் எது?
(1) தொடர்பு படுத்தும் சந்தி (2) நெருக்கமான சந்தி
(3) முதலுரு இணைப்பு (4) தாங்கும் சந்தி
(5) குழியவுருச்சந்தி

6. பின்வருவனவற்றுள் ஒரு மூல் சேர்வையின் ஓட்சியேற்றத்தின் போது,அதிகளவு சக்தியினை விடுவிக்கும் சேதனச்சேர்வை பின்வருவனவற்றுள் எது?
(1) புரதம் (2) மாப்பொருள் (3) றைபோசு
(4) கொழுப்பு (5) நீர்

7. ATP தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
(1) ATP தாக்கங்களிடையே சக்தியைக்காவும் மூலக்கூறுகளாக தொழிற்படும்.
(2) ATP ஓர் உயிர்ப்பல்பகுதியத்தை ஆக்கும் நியுக்கிளியோரைட்டு ஆகும்.
(3) இவை அசையும் தகவுடையன.
(4) இது இரண்டு உயர்சக்திப்பிணைப்புக்களை கொண்டது.
(5) ATP விரைவாக சக்தியை வெளிவிட்டு விரைவாக மீளத் தோற்றிவிக்கப்படும்.

8. நொதியத் தொழிற்பாடு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது,
(1) போட்டிக்குரிய நிரோதிகள்,நொதியத்தின் உயிர்ப்பு மையத்துடன் பிணைப்படைவதன் மூலம் நொதியத் தொழிற்பாட்டை நிரோதிக்கும்.
(2) சில நொதியங்களுக்கு,குறித்த pH,சிறப்பு pH ஆக காணப்படலாம்.
(3) நொதியத்தொழிற்பாடு,பூட்டுத்திறப்பு பொறிமுறை மூலம் முதலில் எடுத்து விளக்கப்பட்டது.
(4) போட்டியற்ற நிரோதிகள்,நொதியத்தின் உயிர்ப்பு மையம் தவிர்ந்த ஏனைய பகுதிகளுடன் . பிணைப்படைவதன் மூலம் நொதியத் தொழிற் பாட்டை ஊக்குவிக்கும்.
(5) நொதியத்தொழிற்பாடு,புரதங்களின் முப்பரிமான கட்டமைப்பில் தங்கியுள்ளது.

9. பெரும்பாலான பச்சையுருமணிகளின் மணியுருக்களில் நடைபெறுவது பின்வருவனவற்றுள் எது?
(1) நீரின் ஒளித்திருப்ப ஒழுங்கு (2) PGA உருவாகுதல்
(3) மாப்பொருளின் தொகுப்பு (4) RUBP உருவாகுதல்.
(5) காபனீர்ரொக்சைட்டு பதித்தல்

10. பின்வருவனவற்றுள் எது காற்றின்றிய சுவாசத்தின் போது தோற்று விக்கப்படுவதில்லை?
(1) எதையில் அற்ககோல் (2) இலற்றிக் அமிலம்
(3) அசற்றிக் அமிலம் (4) அசற்றல்டிகைட்டு
(5) காபனீர்ரொக்சைட்டு

11. ஒடுக்கற்பிரிவு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?
(1) இதனது இரண்டாவது பிரிவு இழையுருப்பிரிவை ஒத்தது.
(2) இது இருமடியமான கலங்களில் மட்டுமே நிகழும்.
(3) முதலாவது பிரிவின் முன் அவத்தையில் காணப்பட்ட கோப்பு முதலாவது பிரிவின் அனுஅவத்தையிலும் தொடர்ந்து காணப்படும்.
(4) இதன் விளைவாக தாய்க்கலத்தின் பிறப்புரிமை அமைப்பில் இருந்து முற்றிலும் வேறுபட்ட 04 மகட்கலங்கள் பெறப்படும்.
(5) இதன் முன்அவத்தை-1 இலும்,முன் அவத்தை-2 நிகழுவதற்கு ஒப்பீட்டளவில் நீண்ட நேரம் தேவைப்படும்.

12. பின்வரும் எந்த ஒரு பாதை/பாதைகளின் ஊடாக, நீர் அசையும் போது கலச்சுவரினை கடப்பதில்லை?
(1) சிம்பிளாஸ்ட் பாதை (2) அப்போபிளாஸ்ட் பாதை
(3) புன்வெற்றிடப்பாதை (4) சிம்பிளாஸ்ட் பாதை புன்வெற்றிடப்பாதை
(5) அப்போபிளாஸ்ட், சிம்பிளாஸ்ட், புன்வெற்றிடப்பாதை

13. மனிதனின் சுவாசத்தொகுதி தொடர்பான பின்வரும் கூற்றக்களுள் சரியானது,
(1) தொண்டையை படலிட்டுள்ள மேலணிக்கலங்கள் சில சீதம் சுரக்கும் கலங்களைக் கொண்டது.
(2) சுவாசப்பை சிறுகுழாய்கள்,எளிய தனிச்செவ்வகத்திண்ம மேலணியால் நுதிக்கப்பட்டிருக்கும்.
(3) சுவாசப்பை சிறுகுழாய்களில் வளையவுருவான கசியிழையங்கள் காணப்படும்.
(4) நுரையீரலுக்கும்,குருதிக்கும் இடையிலான வாயுப்பரிமாற்றம் சிற்றறையூடாக மாத்திரமே நிகழும்.
(5) வலது நுரையீரல் இரண்டு சோணைகளாகவும், இடது நுரையீரல் மூன்று சோணைகளாகவும் பிரிக்கப்பட்டு காணப்படும்.

14. மனித உடலில் தனித்தறன் உடைய நீர்ப்பீடணத்துடன் தொடர்பான கலம்,
(1) நடுநிலைநாடி (2) மூலநாடி (3) நிணநீர்க்குழியம்
(4) செங்குழியம் (5) இயோசிநாடி

15. மனிதவுடலில் உள்ள நொதியங்களிற் பெரும்பாலானவை நடுநிலையான pH பெறுமானத்தை அணுகிய நிலைமைகளிலேயே தொழிற்படுகின்றன. கீழக்காணும் நொதியங்களுள் எது ,இக்கூற்றுக்கு விலக்காகும்?
(1) Amylase (2) Pepsin (3) Trypsin
(4) Lipase (5) Maltase

16. பாரம்பரியம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
(1) பாரம்பரியத்தின் நிறமூர்த்த கொள்கையினை சட்டன்,போவரி என்ற விஞ்ஞானி கள் வெளியிட்டனர்.
(2) பெரும்பாலான விகாரங்கள் பின்னடைவானதாக காணப்படும் அதேவேளை அவை பல்லின நுகநிலையில் மட்டுமே வெளிக்காட்டப்படும்.
(3) சில விகாரங்கள் ஆட்சியானவையாகவும், நன்மைபயக்க கூடியவையாகவும் காணப்படும்.
(4) மேலாட்சியின் போது வெளிக்காட்டப்படும் இயல்பு, ஒரு பரம்பரையலகின் தொழிற்பாட்டை மற்றைய பரம்பரையலகு நிரப்புவதனால் வெளிக்காட்டப்படும்.
(5) பல்சந்ததிச்சுவட்டில் பரம்பரையலகுகளின் எதிருருக்கள், சுயாதீனமாக தனிப்படுத்துகை அடையும்.

17. துணைவளர்ச்சி முற்றுப்பெற்ற ஒரு இருவித்திலைத்தாவரத்தில் காணப்படும் ஆண்டு வளையங்கள் எதனால் ஆக்கப்பட்டிருக்கும்?
(1) துணைக்காழ் (2) முதல்க்காழ் (3) துணை உரியம்
(4) முதலுரியம் (5) கலன் இழையம்

18. வட்டவடுக்கற்ற ஒளிப்பொசுபோரிலேற்றத்தில் நீர் மூலக்கூறுகள் பகுக்கப்பட்டு ஒட்சிசன் வெளியேற்றப் படுவதுடன், ஐதரசன் அயனானது ஒரு வாங்கி மூலக்கூறு ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இவ் வாங்கி மூலக்கூறாவது,
(1) FAD (2) NAD (3) NADP (4) PEP (5) RUBP

19. யால தேசிய பூங்காவில்,2009 ஆம் ஆண்டில் யானைகளின் கூட்டம் என்பது, ஒரு
(1) குடித்தொகை ஆகும். (2) சாகியம் ஆகும்.
(3) சூழற்தொகுதி ஆகும். (4) உயிர்க்கோளம் ஆகும்.
(5) தனியன் ஆகும்.

20. மனிதனின் பற்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
(1) மனிதனில் காணப்படும் பற்கள் பல்லினப்பற்களாகும்.
(2) மனிதனின் பாற்பற்கள் ஆறாம் மாதமளவில் தோன்ற ஆரம்பிக்கும்.
(3) பாற்பற்களில் முன்கடவாய்ப்பற்கள் காணப்படுவதில்லை.
(4) மனிதனின்,மேற்தாடையிலும் பார்க்க கீழ்த்தாடையில் ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையான பற்கள் காணப்படுகின்றன.
(5) மனிதனின் பாற்பற்களின் எண்ணிக்கை 20 ஆகும்.

21. மனித ஈரல் தொடர்பாக பின்வருவனவற்றுள் தவறான கூற்று,
(1) அது உடலின் மிகப்பெரிய சுரப்பியாகும்.
(2) இதனை மனித உடலின் குருதி வங்கி எனக்கருதலாம்.
(3) இதிலிருந்து பித்தம் சுரக்கப்படுதல் கோலியோசிஸ்ரோகைனின் இனால் தூண்டப்படுகின்றது.
(4) அது வெப்பநிலைச்சீராக்கலுடன் சம்பந்தப்படுகின்றது.
(5) இது இரசாயன சமிபாட்டுத்தொழில் எதுவும் புரிவதில்லை.

22. மனிதனில் குருதிக்குளுக்கோசு மட்ட சீராக்கம் தொடர்பாக இன்சுலின் ஓமோனின் செயற்பாடுகளுள் பொருத்தமானது,
(1) குளுக்கோசின் காற்றுச்சுவாசத்தை அதிகரிப்பதன் மூலம் குருதிக்குளுக்கோசு மட்டத்தை . அதிகரிக்கும்.
(2) குளுக்கோசினை குளுக்கோகான் ஆக மாற்றுவதன் மூலம் குருதிக்குளுக்கோசு மட்டத்தை . குறைக்கும்.
(3) கிளைக்கோஜினை தோற்றுவிப்பதன் மூலம் குருதிக்குளுக்கோசு மட்டத்தை அதிகரிக்கும்.
(4) கலங்களில் குளுக்கோசின் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் குருதிக் குளுக்கோசு மட்டத்தை . அதிகரிக்கும்.
(5) குளுக்கோசினை கிளைக்கோசனாக மாற்றி தசை,ஈரற்கலங்களில் சேமிப்பதன் மூலம் . குருதிக்குளுக்கோசு மட்டத்தை குறைக்கும்.

$Cu^{2+}MnO_4^{2-}MoO_4^{2-}NO_3^{-}O^{2-}$23. அன்னயன்களாக மாத்திரம் தாவரங்களினால் அகத்துறுஞ்சப்படும் பிரதான மூலகமும் அது அகத்துறுஞ்சப்படும் வடிவமும் முறையே,
(1) செப்பு - (2) மங்கனீஸ் -
(3) மொலிப்தினம் - (4) நைதரசன் - (5) ஒட்சிசன்

24. சுகதேகியான மனிதன் ஒருவரின் சிறுநீரகம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பொய்யானது எது ?
(1) இங்கு நடைபெறும் சிறுநீராகச்செயன்முறையில் பௌதீகச்செயன்முறைகளும் சம்பந்தப்பட்டுள்ளன.
(2) இது வயிற்றறைக்குழியில் உள்ள ஏனைய அங்கங்களைவிட கூடுதலான குருதியைப் பெறும்.
(3) இது Renin இனையும், Angiotensinogen இனையும் சுரப்பதன் மூலம் அகஞ்சுரப்பியாகவும் . தொழிற்படுகின்றது.
(4) சிறுநீரகத்திகளைக் கொண்டிருப்பதனால் குருதிக்குளுக்கோசு மட்ட சீராக்கத்தில் பங்குபற்றும்.
(5) இதன் அடிப்படை தொழிற்பாட்டு அலகாக சிறுநீரகத்தி காணப்படும்.

25. மனிதனின முள்ளந்தண்டு,
(1) சிறுசாவிகளினதும் விலாஎன்புகளினதும் மூட்டுக்கும், தசைகளின் இணைப்புக்கும் மேற்பரப்பை . வழங்குகின்றது.
(2) 33 என்புகளை கொண்டிருக்கும் அதேவேளை அவற்றுள் 26 அசையத தக்கவை.
(3) அதனுள் இருக்கும் செவ்வென்பு மச்சையில் வாழ்நாள் முழுவதும் செங்குருதிச்சிறுதுணிக்கைகளை உற்பத்தி செய்கின்றது.
(4) நான்கு விற்களைக்கொண்டிருக்கும் அதேவேளை அவற்றுள் மூன்று விற்கள் துணை விற்களாகும்.
(5) அதிர்ச்சிகளை அகத்துறுஞ்சுவதற்கு கசியிழையப்பதார்த்தங்களினாலும், ஊன்பசைப் பதார்த்தங்களினாலுமான முள்ளந்தண்டென்பிடை வட்டத்தட்டுக் களை கொண்டுள்ளது.

26. மனித ஆணின் விந்தானது சூலை நோக்கி அசைவதற்கான சக்தியை பெறுவதற்காக காணப்படும் விந்தின் பகுதியும், அதில் பெருமளவு காணப்படும் கலப்புன்னங்கமும், முறையே,
(1) இழைமணி, நடுத்துண்டு (2) கழுத்து, இழைமணி
(3) நடுத்துண்டு, இழைமணி (4) அச்சிழை, இழைமணி
(5) இழைமணி, அச்சிழை

27. சுகதேகியான மனித ஆணின் சுக்கிலப்பாயம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
இது விற்றமின்-C யினைக் கொண்டது.
(2) இதன் pH 7.4-8.4 ஆகும்.
(3) இதன் பெரும் பகுதியினை ஆக்குவது,சுக்கிலப்புடகத்தின் சுரப்புக்களாகும்.
(4) இது விந்துக்கள் அசைவதற்கான சக்தியை வழங்க பிரக்ரோசு இனைக் கொண்டது.
(5) இது விதைமேற்றிணியின் சுரப்புக்களையும், சுக்கிலப்புடகச் சுரப்புக்களையும், முன்னிற்கும்சுரப்பியின் சுரப்புக்களையும் மட்டும் கொண்டது.

28. மனித குருதியமுக்கம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
(1) ஓய்வில் இருக்கும் சாதாரண உடல் நலமுள்ள வயதுவந்தவரின் குருதியமுக்கம் 120/80 mmHg ஆகும்.
(2) நாடிகளின் சுவர்களில் கொழுப்புப்படிவதனால் உயர் குருதியமுக்கம் உண்டாகலாம்.
(3) குருதியமுக்கம் நாடி,நாளச்சுவர்களின் மீள்சக்திதன்மையில் சார்ந்திருக்கின்றது.
(4) பரிவு நரம்பு அசற்றைல்கோலின் எனும் நரம்புச்செலுத்தியினை செலுத்துவதன் மூலம் . குருதியமுக்கத்தை அதிகரிக்கும்.
(5) ஒரு நபரின் குருதியமுக்கம் அந்நபரின் தொழிற்பாட்டு நிலையிலும் தங்கியிருக்கும்.

29. கருக்கட்டப்பட்ட சூல் ,கருப்பையில் பதிக்கப்படும் நிலை,
(1) முசுவுரு (2) நுகம் . (3) அரும்பர்சிறைப்பை
(4) முதிர்மூலவுரு (5) முதிர்வுவழிக்கரு

30. மானிடத்தனித்திறன் உள்ள ஆளுமையான செயற்பாடுகளை கட்டுப் படுத்துவதற்காக மனித மூளையில் அமைந்த பகுதி,
(1) நுதற்சோணை (2) மூளி
(3) நீள்வளையமையவிழையம் (4) கடைநுதற்சோணை
(5) சுவர்ச்சோணை

31. DNA மீளச்சேர்க்கை தொழில்நுட்பத்தில Plasmid இனைபயன்படுத்தும் படிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
(A) Endonuclease நொதியத்தினை பயன்படுத்தல்
(B) DNA Ligase இனைப்பயன்படுத்தல்
(C) பற்றீரியாவில் இருந்து Plasmid இனை வெளியே எடுத்தல்.
(D) Plasmid இனை பற்றீரியாவினுள் புகுத்தல்.
மேல் உள்ள படிமுறைகளின் சரியான தொடர் ஒழுங்கை தருவது,
(1) C,A,B,D (2) C,A,D,B (3) A,C,D,B
(4) C,B,A,D (5) D,B,A,C

32. தக்காளித்தாவரத்தில், வட்டவடிவ பழங்கள் (R) நீள்வட்டவடிவ பழங்களுக்கு(r) ஆட்சி.அழுத்தமான வித்து (L), அழுத்தமற்ற வித்துக்கு (l) ஆட்சி. இரண்டு இயல்புகளும் பல்லினநுகம் உடைய தக்காளித்தாவரம் சோதனைக்கலப்புக்கு உள்ளாக்கப்பட்டது. இதன் போது கிடைத்த எச்சங்கள் முறையே,
. – வட்டவடிவ பழமும், அழுத்தமான வித்தும் கொண்ட தாவரங்கள்- 40
. – வட்டவடிவ பழமும் அழுத்தமற்ற வித்தும் கொண்ட தாவரங்கள்- 10
. – நீள்வட்டவடிவ பழமும், அழுத்தமற்ற வித்தும் கொண்ட தாவரங்கள்- 40
. – நீள்வட்டடவிவ பழமும், அழுத்தமான வித்தும் கொண்ட தாவரங்கள்- 10
R,L ஆகிய பரம்பரையலகுகளின் இடைவெளி படஅலகுகளில்,
(1) 20 (2) 10 (3) 40 (4) 80 (5) 50

33. தாவர இனப்பெருக்கம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் சரியானது,
(1) அரும்பொட்டுதலின்போது எப்போதும் ஒட்டுக்கட்டையும் ஒட்டுமுளையும் ஒரே இனத்தை சார்ந்தவையாக . இருக்க வேண்டும்.
(2) தாவரங்களை பதியமுறையில் இனப்பெருக்கும் முறைகளில், இலங்கை யில் பிரதானமாக இடம்மாறிப் . பிறந்த அரும்புகள் முறை பயன்படுத்தப்படும்.
(3) ஒரு தாவரத்தின் கக்கவரும்பை இன்னோர் வேருள்ள தாவரத்துக்கு மாற்றி நடுதல் தண்டொட்டுதல் . ஆகும்
(4) பாரம்பரியரீதியில் மாற்றயமைக்கப்பட்ட தாவரங்களை இழையவளர்ப்பு மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
(5) உயர்தாவரங்களில் பதியமுறை இனப்பெருக்கம்,மிகச்சாதரனமான இலிங்கமில் முறை இனப்பெருக்கம் . ஆகும்.

34. மனிதனில் பிரசாரணச்சீராக்கத்தில் பங்கேற்கும் பிரதான அங்கமும், ஓமோன்களும் முறையே,
(1) சிறுநீரகம் - ADH, Aldestrone (2) இதயம் - ADH, Oxytocin
(3) சிறுநீரகம் - ADH (4) ஈரல் - ADH, Insulin
(5) சிறுநீரகம் - Aldestrone

35. மனிதனின் நரம்புத்தொகுதி பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
(1) சுற்றயல் நரம்புத்தொகுதியில் உள்ள நரம்புகள் யாவும் கலப்பு நரம்புகளாகும்.
(2) பரபரிவு நரம்புகள் முண்ணாணில் இருந்தும் மூளையத்தில் இருந்தும் தோற்று விக்கப்படும்.
(3) சுற்றயல் நரம்புத்தொகுதி 33 சோடி முண்ணான் நரம்புகளையும் 12சோடி மண்டையோட்டு . நரம்புகளையும் கொண்டது.
(4) பரிவு நரம்புகள் முண்ணாணில் இருந்து மட்டுமே தோற்றுவிக்கப்படும்.
(5) சுற்றயல் நரம்புத்தொகுதி சருமம் எனும் போர்வையினால் போர்க்கப்பட்டு காணப்படும்.

36. மானிடப்பெண்ணின் கருப்பையின் தொழிற்பாட்டு படையாக கருதப்படுவது,
(1) கருப்பை அகச்சுற்று (2) கருப்பை அகத்தோல்
(3) கருப்பைத்தசை (4) கருப்பை உட்சுற்று (5) கருப்பை நடுப்படை

37. கன்னிக்கனியமாதல் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் சரியானது,
(1) இதன் போது கருக்கட்டல் நடைபெறாமல் ஆண்கலவாக்கியில் இருந்து பழம் விருத்தியடையும்.
(2) இதன் போது உருவாகும் பழங்களின் வித்துக்கள் கன்னிப்பிறப்பின் போது உருவாகும் வித்துக்களை . விட வாழ்தகவு கூடியனவாக காணப்படும்.
(3) IBA, ஜிபரெலின் போன்ற தாவரவளர்ச்சி பதார்த்தங்களினால் சிலதாவர இனங்களில் . கன்னிக்கனியமாதல் தூண்டப்படும்.
(4) கருக்கட்டல் நடைபெற்று, சூலகத்தில் இருந்து பழம் விருத்தியடைதல் கன்னிக்கனியமாதல் ஆகும்.
(5) சில தாவரங்களில் தாவரவளர்ச்சிப்பதார்த்தத்தினால் கன்னிக்கனிய மாதல் தூண்டப்படும்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம்



(பளை)

பாதிக்கப்பட்ட புலம்பெயர் நாடுகளிலிருந்து ஒரேயொரு அமைப்பு வடிவில் உதவுகின்ற அமைப்பாக பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கம் காணப்படுகிறது லண்டனிலும், பச்சிலைப்பள்ளியிலும் கிளைகளை கொண்டு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கம் மேற்கொண்டு வருகின்ற பணி பாராட்டத்தக்கது. இது ஏனைய பிரதேசங்களுக்கு ஒரு முன்னுதாரணம் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சி மகிழ்ச்சியளிக்கிறது. கல்வி, தொழிற்பயிற்சி, வாழ்வாதாரம், முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்கு உதவி, இச்சங்கத்தின் செயற்பாடு ஒருமுன்னுதாரணச் செயற்பாடாக விரிந்து செல்கிறது. தமது சொந்த மக்களின் அவலங்களைத் துடைக்கப் புலம்பெயர்ந்த எமது உறவுகள், புலம்பெயர் நாடுகளில் கடின உழைப்பை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்களின் கடின உழைப்பின் மூலம் கிடைக்கின்ற உதவியே இந்த அமைப்பின் ஊடாக இந்தப் பிரதேச மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது புலம்பெயர் உறவுகளில் பெரும்பாலானவர்கள் பதினாறு மணித்தியாலயங்கள் பணியாற்றுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவ்வாறான கடினப்பணிக்கு ஊடாக உழைக்கின்றவற்றில் ஒரு தொகையினையே இங்கு எம் மக்களின் மேம்பாட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர்.

எனவே, இந்த உதவிகளின் பெறுமதியினை எம்மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனத்தெரிவித்த அவர், பச்சிலைப்பள்ளி பிரதேசம் அபிவிருத்தி அடைய வேண்டும், மக்களின் வாழ்க்கை நிலை மேம்பாடடைய வேண்டும் என்பதில் அவர்கள் மிகவும் அக்கறையாக உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தெய்வேந்திரம், பளை பிரதேச செயலர் சத்தியசீலன், பளை பிரதேச சபையின் உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், தியாகராசா, சுந்தரலிங்கம், மருத்துவர் அம்பிகைபாலன், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பளை பிரதேச சபையின் செயலாளர் சிவப்பிரகாசம், ஓய்வுப்பெற்ற கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், மற்றும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மலர் வெளியீடு

(முழங்காவில்)

பூநகரி மறவ குறிச்சி பத்தியார்காடு வரசித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேக நிகழ்வும், கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடும் இன்று நண்பகல் இடம்பெறவுள்ளது.

108 சங்குகள் கொண்டு விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறுவதோடு, கும்பாபிஷேக மலர் வெளியீடும் இடம்பெறும்.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் தா.அரியரத்தினம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் அயற்கிராமங்களில் உள்ள ஆலய பரிபாலன சபையின் தலைவர்களைக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (112)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

பூநகரி மகா வித்தியாலயத்தின் இவ் ஆண்டுக்கான பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலையின் அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

புதிய வருடத்திற்கான நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவிருப்பதால் அனைத்து பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்கும்படி செயலாளரினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (112)

## கண்காணிப்பது யார்?



யாழ்.குடாநாட்டு வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டு வருவதுடன், அவற்றுக்கு வீதி மஞ்சற் கோடுகளும் இடப்பட்டு வருகின்றன, இருந்தபோதும் சைக்கிளோட்டிகள் வீதிக் கடவைக் கோடுகளையும் பொருட்படுத்தாது சமாந்தரமாகச் செல்வதைக் காணலாம். (21)

# கொலை செய்தது ஒருவரை; மரண தண்டனை ஐவருக்கு

(கொழும்பு)

ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட ஐவருக்கு மொனராகலை மேல் நீதிமன்று நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

2002ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி டீ.எம். மகிந்த நிஸ்ஸங்க என்பவரை கடத்திச் சென்று கொலை செய்த சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்தக் கொலை தொடர்பில் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு தொடரப்பட்டிருந்த நிலையில் நாலாவது பிரதிவாதி விடுதலை செய்யப்பட்டார். இந்நிலையில் ஐந்து பிரதிவாதிகளுக்கு மொனராகலை மேல் நீதிமன்ற நீதிபதி எப்.குலதுங்க மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளதாக அத தெரண செய்தியாளர் தெரிவித்தார்.

## மலசலகூடக் குழியில் மனித எச்சங்கள் மீட்பு

(கொழும்பு)

மிஹிந்தலை, மஹகனந்தராவ பகுதியிலுள்ள வீடொன்றில் தோண்டப்பட்ட மலசலகூடக் குழியிலிருந்து மனித எச்சங்கள் என சந்தேகிக்கப்படும் எலும்புக்கூடுகள் பலவற்றை கண்டெடுத்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை, மஹகனந்தராவ, யாய 1 பகுதியிலுள்ள வீடொன்றில் மலசலகூடக் குழியொன்றைத் தோண்டிக் கொணடிருக்கும் போது நான்கரை அடி ஆழத்தில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் மனித எச்சங்கள் என இது வரையில் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஏழாலை-குரும்பசிட்டி வீதியில் தரித்து நிற்கும் வாகனங்களால் ஆபத்து

(ஏழாலை)

ஏழாலை, குரும்பசிட்டி வீதி மற்றும் மயிலங்காடு பகுதிகளில் இரவு நேரங்களில் வீதிகளிலும், வீதி ஓரங்களிலும் தரித்து நிற்கும் வாகனங்களால் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகின்றது.

பயணம் செய்யும் வாகனங்களும் பயணிகளும், பாதசாரிகளும் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இரவு நேரங்களில் தரித்து நிற்கும் வாகனங்கள் சரியான சமிக்ஞைகள் இன்றி நிற்பதால் விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன.

தரித்து நிற்கும் வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் உரியவர்கள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்துதல் மூலமே விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

## அமைச்சர் அதாவுல்லா மன்னார் விஜயம்

தேசிய காங்கிரஸின் தலைவரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா இன்று மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அமைச்சர் றிசாட் பதியுதீனின் அழைப்பின் பேரில் அவர் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தலைமன்னார் விலேஜ் வீதி, கரிசல் வீதி, எஸ்ப்பிளனேட் வீதி மற்றும் பள்ளிமுனை கடற்கரைவீதி ஆகியன அமைச்சர் அதாவுல்லாவினால் திறந்துவைக்கப்படவுள்ளது. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கீழ் இயங்கும் ஆசிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதி உதவியின் கீழ் 180 மில்லியன் ரூபா செலவில் இந்த நான்கு வீதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நானாட்டான் பிரதேச சபைக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடமும் அமைச்சரினால் திறந்துவைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வுகளில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## உடுவில் பிரதேச செயலகத்தில் இரு நாட்கள் நடமாடும் சேவை

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் ஆட்பதிவுத் திணைக்களமும், பப்ரல் அமைப்பும் இணைந்து நடமாடும் சேவை ஒன்றினை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இச்சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பொது மக்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெற்றுச் செல்லுமாறு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (66)

## அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அரிசியாக மாற்றிக் கொடுக்கும் இணக்கப்பாட்டுடன் நெல்லைப் பெற்று அதனை மீளக் கையளிக்கத் தவறிய நெல் ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக நெல் சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் மூலம் சுமார் ஆறு மில்லியன் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கே.பி. ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நெல்லைப் பெற்று அரிசியை வழ்ங்கத் தவறிய நெல் ஆலை உரிமையாளர்களுக்கு காலக்கெடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

தனியார் நெல் ஆலை உரிமையாளர்கள் சுமார் 20 ஆயிரம் தொன் நெல்லை சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்க வேண்டியுள்ளது.

இதற்கமைய உடன்படிக்கையை மீறிய நெல் ஆலை உரிமையாளர்களிடம் சுமார் 80 மில்லியன் ரூபாவை அறவிடுவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மந்த கதியில் பாலம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், நல்லூருக்கும் முத்திரைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பல மாதங்களாக மந்தகதியில் பாலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதனால் அப்பகுதியூடாக பயணம் செய்யும் பாதசாரிகளும், வாகனப் போக்குவரத்தை மேற்கொள்வோரும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் நாளாந்தம் விபத்துக்கள் இடம்பெறுவதையும் அவதானிக்க முடிகிறது. (சா)

# எண்ணெய்லொறியுடன் கார் மோதியது;
# உகண்டாவில் தீயில் கருகி 29 பேர் பலி



உகாண்டா நாட்டின் தலை நகர் கம்பாலாவில் உள்ள முக்கிய சாலை வழியாக பெற்றோல் ஏற்றிய லொறி ஒன்று சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த கார் லொறியின் மீது மோதியதில் லொறி தீப்பிடித்து வெடித்துச் சிதறியது. கார் லொறியின் மீது மோதியதில் உடனே லொறியில் இருந்து வழிந்தோடிய பெற்றோலை வழித தெடுக்க ஒரு கூட்டத்தினர் சம்பவ இடத்தை நெருங்கிய போது தீடீரென அந்த லொறி தீப்பிடித்து வெடித்துச் சிதறியது.

இதில் எண்ணெய் சேகரிக்க வந்தவர்கள் உள்பட 29 பேர் தீயில கருகிப் பலியாயினர். பாதிக்கப்பட்ட 20இற்கும் மேற்பட்டோருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இவ் வெடிப்புச் சம்பவத்தில் 20 மேற்பட்ட மோட்டார் சைககிள்கள் எரிந்து சாம்பாலாசாம்பாலாயின.

உகண்டாவின் கம்பாலா நகரம் மூன்று பக்கங்களிலும் ருவாண்டா, புருண்டி, டி.ஆர். காங்கோ ஆகிய நாடுகளால் சூழப்பட்டுள்ள முக்கிய பகுதியாக விளங்குகிறது.

# ஆற்றில் இறங்கிய ஹெலிகொப்டர்



நியூயோர்க் நகரிலிருந்து புறப்பட்ட தனியாருக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று, இயந்திரக் கோளாறு காரணமாக ஆற்றில் தரையிறக்கப்பட்டது.நியூயோர்க் நகரில் உள்ள வால் ஸ்ட்ரீட் பகுதியில் இருந்து ஸ்வீடன் நாட்டைச்சேர்ந்த 2 குழந்தைகள் உள்பட 4 பேரை ஏற்றிக்கொண்டு ஒரு தனியார் ஹெலிகொப்டர் புறப்பட்டுச் சென்றது.

புறப்பட்ட 12ஆவது நிமிடத்தில் தேவையான உந்து சக்தி கிடைக்காததால் விமானியால் தொடர்ந்து ஹெலிகொப்டரை இயக்க முடியவில்லை. அப்போது, ஹட்சன் ஆற்றின் அருகேயுள்ள 79ஆவது தெருவுக்கு மேலே ஹெலிகொப்டர் பறந்து கொண்டிருந்தது.மிகவும் சிக்கீலான சூழ்நிலையில் சமயோஜிதமாக முடிவெடுத்த விமானி, ஹட்சன் ஆற்றில் ஹெலிகொப்டரை பத்திரமாக தரையிறக்கினார்.

தகவல் அறிந்து விரைந்து வந்த மீட்புப் படையினர் 4 பயணிகளையும், விமானியையும் ஆற்றில் இருந்து வெளியேற்றினர்.ஹெலிகொப்டரை ஆற்றில் இறக்கி இருக்காவிட்டால் கட்டடங்கள் மீது மோதி பெரிய விபத்தும், உயிர் சேதமும் ஏற்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# விவசாய நிலத்தை உழுதபோது குடத்தில் செப்பு காசுகள்

இந்தியா தமிழ்நாடு பாலக்கோடு அருகே, விவசாய நிலத்தில், குடத்தில் புதைத்து வைத்திருந்த பழங்கால செப்புக் காசுகள் கண்டெடுக்கப்பட்டன.

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அடுத்த, சிக்கமாரண்டஹள்ளி புதூரைச் சேர்ந்தவர் பொன்னன் என்பவருக்கு சொந்தமான நிலத்தை, டிராக்டரால், உழவு செய்யும் பணியில் ஈடுபட்டார். அப்போது, நிலத்தில் இருந்து, பொருள் தட்டுப்பட்டுள்ளது. உடனே, பொன்னன், சத்தம் வந்த பகுதியை தோண்டிப் பார்த்துள்ளார்.

மண்ணுக்குள், பழமையான ஒரு பித்தளை குடம் புதைந்திருந்தது தெரிந்தது. குடத்தை வெளியே எடுத்துப் பார்த்தபோது, அதில், ஏராளமான செப்பு காசுகள் இருந்துள்ளன.

இதுகுறித்து, பாலக்கோடு தாசில்தார் லதாவுக்கு, பொன்னன் தகவல் தெரிவித்தார். வருவாய் துறையினர், செப்புக்காசுகள் கிடைத்த இடத்திற்கு சென்று பார்வையிட்டனர். குடத்தில், பழங்கால முத்திரையிட்ட, 190 செப்பு காசுகள் இருந்தன. அவற்றை, தாசில்தார் அலுவலகத்தில் பத்திரமாக வைத்துள்ளனர். இக்காசுகள் குறித்து ஆய்வு செய்யப்படும் என்று கூறப்பட்டது.

# மண்டேலாவின் மூத்த மகள் கிளம்பியது புதிய சர்ச்சை




நான் தான் நெல்சன் மண்டேலாவின் காதலிக்கு பிறந்த மகள் என உரிமை கோரியுள்ளார் 65 வயதுப்பெண் ஒருவர். தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, நுரையீரல் தொற்று காரணமாக கடந்த 8ஆம் திகதி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

தற்போது மண்டேலாவுக்கு செயற்கை முறையில் சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே அவருக்கு எந்த நேரத்திலும் உயிர் பிரியலாம் என்பதால், அவருடைய உறவினர்கள் அனைவரும் பிரிட்டோரியாவில் குவிந்துள்ளனர்.

இந்நிலையில் புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது. மண்டேலாவுக்கு மூன்று மனைவிகள், முதல் மனைவி இறந்துவிட்டார். இரண்டாவது மனைவி வின்னி, கொலை வ்ழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டதால், அவரை மண்டேலா விவாகரத்து செய்து விட்டார்.மூன்றாவது மனைவி கிரேகா மிச்சேல், இவர் மொசாம்பிக் நாட்டு முன்னாள் ஜனாதிபதி சமோராவின் மனைவி. சமோரா இறந்த பின், மண்டேலாவை திருமணம் செய்து கொண்டார்

மண்டேலாவின் ஆறு குழந்தைகளில், மூன்று பேர் உயிருடன் உள்ளனர். இந்நிலையில் ஓனிகா நேம்பேஜி(வயது 65) என்பவர் தான் மண்டேலாவின் மகள் என்று புது சர்ச்சையை கிளப்பியுள்ளார்.மண்டேலாவுக்கும், அவரது காதலி சோபியா மஜேனிக்கும் கடந்த 1947இல் பிறந்ததாகக் கூறியுள்ளார்.மேலும் அவர் கூறுகையில், மண்டேலா குடும்பத்தினர் என்னை ஏற்க மறுக்கின்றனர், அவரை பார்க்கவும் அனுமதி கிடைக்கவில்லை. எனவே மரபணு சோதனையை நடத்த வேண்டும் எனக்கூறியுள்ளார்.அவரது வீட்டில் வேலை செய்த போது சோபியாவை, மண்டேலா காதலித்ததால் தான் பிறநததாக ஓனிகா கூறுகிறார்.

# பாகிஸ்தானில் மழையில் நடனமாடிய இரு இளம்பெண்கள் சுட்டுக்கொலை



மழையை கண்ட சந்தோஷத்தில் துள்ளி ஆடிய இரு சகோதரிகளை பாகிஸ்தான் பழமைவாதிகள் வெறித்தனமாக சுட்டுக் கொன்றுள்ளனர்.இந்த வெறிச் செயலானது பெண்ணியக்கவாதிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெலிதான தூரல் மழைக்கு இடையில் பாகிஸ்தானின சிலாஸ் பகுதியை சேர்ந்த 16 வயதான நூர் ஷேசா மற்றும் 15 வயதான் நூர் பஸ்ரா ஆகிய சகோதரிகள் சில சிறுவர்-சிறுமிகளுடன் துள்ளி நடனமாடும் காட்சி சமீபத்தில் இணையத்தளங்களில் உலா வந்தன.

உலகெங்கிலும் வாழும் ஆயிரக்கணக்கானோர் இந்த படப்பதிவை கண்டு மகிழ்ந்த நிலையில், இவர்களின் வீட்டுக்கு வந்த 5 பேர் காட்டு மிராண்டித் தனமாக அந்தப் பெண்கள் இருவரையும் சுட்டுக் கொன்றனர்.அத்துடன், அவர்களின் தாயார் நோஷரா என்பவரையும் ஈவிரக்கமற்ற அந்த பழமைவாத கும்பல் சுட்டுக் கொன்றது.

குடும்ப கௌரவத்தை குலைத்ததாக கருதிய தனது பங்காளி தான் கூலிப்படையை ஏவி தங்கைகளையும், தாயையும் சுட்டுக் கொன்றதாக பலியான பெண்களின் அண்ணன் பொலிஸில் புகார் அளித்துள்ளதனால், தலைமறைவாக இருக்கும் குத்தோர் என்ற பழமைவாதியையும் அத்துடன், இந்தப் படுகொலையை செய்த 5 பேரையும் பொலிஸார் தேடிவருகின்றனர்.



இந்தியாவில் வடகிழக்கு கெமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் கே.டி. பர்னாயக் ஓய்வு பெற்றார். இதனையடுத்து அவர் அலங்காரம் செய்யப்பட்ட வண்டியில் அழைத்து வரப்பட்டார்.

# உத்தர காண்ட் பேரழிவில் இரண்டு இலட்சம் பேர் பாதிப்பு



உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட பேரழிவில் சிக்கி சுமார் 2 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களில் சுமார் இரண்டரை இலட்சம் பேர் வெளிமாநிலத்தை சேர்ந்த பக்தர்கள் ஆவார்கள்.

கடந்த 15 நாட்களாக 50 ஹெலிகொப்டர்கள் உதவியுடன் 10 ஆயிரம் இராணுவ வீரர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். இதுவரை ஒருஇலட்சத்து 7670 பேரை அவர்கள் மீட்டனர். இந்த நிலையில் பத்ரிநாத்தில் 2389பேர் தவிப்பதாக தெரிய வந்தது. அவர்களை மீட்கும் பணி நடந்தது.

ஹெலிகொப்டர்கள் மூலம் 874 பேர், சாலை வழியாக 615 பேர் மீட்கப்பட்டனர். பத்ரிநாத்தில் இன்னும் 900 பேர் மீட்கப்படாமல் உள்ளனர். அவர்களில் 600 பேர் உள்ளூர் மக்கள். 300 பேர் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். 900 பேரும் மீட்கப்பட்டு விடுவார்கள் என்று தெரிகிறது. எனவே மீட்புப் பணிகள் நிறைவு பெற்று விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து சீரமைப்புப் பணிகளை தொடங்கி தீவிரப்படுத்த உத்தரகாண்ட் மாநில அரசு திட்டமிட்டுள்ளது. உத்தரகாண்டில் ருத்ர பிரயாகை, சமோலி, உத்தரகாசி, தெக்ரி ஆகிய 4 மாவட்டங்களில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் 739 கிராமங்களில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. 200 கிராமங்களில் 90 சதவீதம் அழிந்து விட்டது.

# தடம்மாறி குடைசாய்ந்தது வாகனம்
# நாகர்கோவில் விபத்தில் ஆறுபேர் காயம்

(வடமராட்சி)

வடமராட்சி நாகர்கோவில் பகுதியில் நடந்த வீதி விபத்து ஒன்றின்போது ஆறுபேர் படுகாயமடைந்துள்ளனர். நெல்லியடியில் இருந்து புறப்பட்ட லொறி ஒன்று மருதங்கேணி வீதியூடாக முல்லைத்தீவுக்குச் சென்றுகொண்டிருந்தது. மது போதையில் இருந்ததாகக் கூறப்படும் இதன் சாரதி நிலை தடுமாறி வாகனத்தை செலுத்தியதால் இந்த வாகனம் மேற்படி வீதியில் தடம்புரண்டது. இதனால் இதில் பயணித்த ஒன்பது பேர் படுகாயமடைந்தனர். இச்சந்தர்ப்பத்தில் காயம் எதுவுமின்றித் தப்பிய சாரதி அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அங்கிருந்து அம்மன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பின்னர் இவர்கள் அனைவருமே பின்னர் அங்கிருந்து மந்திகை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்தவர்களான சி.மதிவர்மன் (வயது - 40), ச.துஷ்யந்தன் (வயது-17), ஜெ.ஜெயகாந்தன் (வயது-19), ச.மதுசன் (வயது-17), ம.நிக்ஷன் (வயது-17) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸ விசாரணைகள் தொடர்கின்றன. (116)

## வலி. வடக்கில் 25 வருடங்களின் பின்னர் ஆலய தரிசனத்துக்கு அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள வழிபாட்டுத் தலங்களில் 25 வருடங்களின் பின்னர் மீண்டும் வழமைபோல் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதி உட்பட்ட மயிலிட்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் சென்று பொதுமக்கள் தங்களது வழிபாடுகளை மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயத் திருவிழாக்களுக்காக செல்ல அனுமதி பெற்றுத்தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறை சார்ந்தோருடன் கலந்துரையாடியதன் பிரகாரம் குறித்த வழிபாட்டுத் தலங்களுக்கு பொதுமக்கள் சென்றுவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிலையில் தமது கோரிக்கைக்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிக்காகவும் அதனால் கிடைக்கப் பெற்றுள்ள சந்தர்ப்பத்திற்காகவும் அமைச்சருக்கு பொதுமக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

### வடக்கின்...

ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வினை வடமாகாண சபை நடாத்தி அவர்களின் தரத்தினை உறுதிப்படுத்தித் தருமாறு அமைச்சர் விடுத்த கோரிக்கைக்கு ஆளுநரும் ஒத்துழைப்பு நல்குவதாக உறுதியளித்துள்ளார்.

இவர்களுக்கான நியமனம் வெறும் வேலைவாய்ப்பாக மட்டுமல்லாது வடமாகாணத்தை முன்னேற்றும் செயற்றிட்டமே எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

### நிஷாந்தன்...

ஆகியோர் அத்துமீறி நுழைந்ததாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டின் பிரகாரம், முன்னாள் மாநகரசபை உறுப் பினரைக் கைது செய்துள்ளதாகவும் இவரை யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

### நியமனம்...

ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### 13 ஆவது...

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியையோ, பிரதமர் மன்மோகன் சிங்கையோ அவர் சந்திப்பது உறுதியாக வில்லை.

சிவ்சங்கர் மேனன் கொழும்பு செல்வதற்கு முன்னர், கடுமையான தகவல் ஒன்றை பசில் ராஜபக்ஷ மூலம் கொழும்பிற்கு அனுப்பவே இந்தியா அவரை அழைத்துள்ளதாகவும் புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்றும் சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை 13 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தில் மேற கொள்ளப்பட உள்ள திருத்தங்கள் குறித்தும், அது தொடர்பாக இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றியும் இந்தியாவுக்கு தெளிவுபடுத்துவதே தனது இந்திய விஜயத்தின் பிரதான நோக்கம் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த எண்ணியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது இந்திய விஜயத்தின் போது, அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரை சந்திக்க உள்ளதாக வும் அமைச்சர் கூறியுள்ளார். இதனை தவிர பொருளாதார உறவுகள் குறித்தும் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் பசில் கூறியுள்ளார.

### வடமாகாண...

இதன்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக நேற்று யாழ். ஊடக அமையத்தில் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சி.வி.கே.சிவஞானம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தகவல் தருகையில் வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகாத நிலையில் அவ்வாறு தேர்தல் நடைபெற்றால் முதலமைச்சர் வேட்பாளர் யார், வேட்பாளர் தேர்வு எவ்வாறு அமையும் என்பது குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை எமது யாழ் பணிமனையில் நடைபெற்றது. அந்த வகையில் நாங்கள் மூன்று தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம். முதலாவது வேட்பாளர் தெரிவுகள் அந்தந்த மாவட்டக்கிளைகளுக்கு வழங்கப்படவேண்டும். அதாவது இந்தத் தேர்தல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நடைபெறவுள்ளது. இதற்கு வேட்பாளர் தெரிவுப்பணி அந்தந்த மாவட்ட கிளைகளிடமே வழங்கப்படவேண்டும். வேட்பாளர்கள் அந்தந்த மாவட்டத்திலேயே நிரந்தரமாக வசிப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

மூன்றாவதாக முதலமைச்சர்கள் வேட்பாளராக தமிழரசுக் கட்சியினையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினையும், பிரித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் மாவை சேனாதிராசவை முதலமைச்சராக தீர்மானிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள மாவட்டக்கிளையில் தீர்மானித்துள்ளோம். இந்தத் தீர்மானம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளருக்கு நேற்று பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட்டிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முதலமைச்சர் வேட்பாளராக பல்வேறுபட்டவர்களது பெயர்கள் வெளிவரும் நிலையில் நேற்று மாலை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவுசெய்ததற்குக் காரணம் என்னவென்று வினாவப்பட்டதற்குப் பதிலளித்த அவர் மாவை சேனாதிராசா தமிழரசுக் கட்சியினைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு முன்னின்று உழைத்தவர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை நிர்வகித்து வருபவர் என்ற ரீதியிலும் ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெறக்கூடியவர் என்ற நிலையிலும் அவரது பெயரைப் பிரேரித்துள்ளோம் என்றார். (பா)

### 13 மாற்றியமைக்கப்...

மீறும் வகையில் அமையவில்லை. இது குறித்து அச்சம் கொள்ளும் நபர்கள் மாகாணசபை முறைமை பற்றி அறியாதவர்களாகவே இருக்கவேண்டும். நான் முன்னதாகவே ஏகாதி பத்தியத்திற்கு எதிரானவர் எனவும், இந்த அரசாங்கத்தில் ஜனநாயகம் தொடர்பில் பிரச்சினை ஒன்று உள்ளது.

மாகாண சபை முறையை இரத்துச் செய்யுமாறு ஜே.என்.பி.யின் தலைவர் விமல் வீரவன்ச கோரவில்லை எனவும், அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்றே கோரிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### குகநாதன்...

உதயன் செயதியாசிரியர் குகநாதன் தாக்கப்பட்ட சம்பவத்திற்கும் உங்களுக்குத் தொடர்பு இருபபதாகச் செய்திகள் வெளியாகியுள்ளனவே இது பற்றி உங்களது கருத்து என்னவென்று வினாவப்பட்டதற்கு பதிலளித்த அவர் அவ்வாறு தமக்குத் தொடர்பு இருப்பது தொடர்பான செய்தியை மறுத்த அவர் உதயன் பத்திரிகையின் உள்வீட்டு முரண்பாட்டின் காரணமாக குகநாதன் தாக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்ததுடன் குகநாதன் தாக்கப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் அவர் அந்த நிறுவனத்தின் ஊழியர் ஒருவரை உள்முரண்பாட்டின் காரணமாக அறையில் சிலமணி நேரம் அடைத்திருந்ததாகவும் தகவல் வெளியிட்டார்.

எவ்வாறாயினும் நேருக்கு நேர் மோதும் மனித்தைரியம் தம்மிடம் இருப்பதாகவும் இப்படி வயதான ஒருவரை தான் தாக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்ததுடன், இந்தத் தாக்குதலில் சட்டத்தரணி சம்பந்தப்பட்டிருப்பார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தால் ஏன் இன்னமும் கைது செய்யவில்லை என்றும் கேள்வி எழுப்பினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணையும் நோக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களாக சுதந்திரக் கட்சியில் இணைந்துகொள்ள நடவடிக்கை எடுத்துவருகின்றேன் எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருப்பது உசிதமானது இல்லை என்பதனால் நேற்றுமுதல் யாழ். மாநகரசபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகியுள்ளேன்.

எனது பதவி விலகல் கடிதத்தை யாழ். மாநகர முதல்வரிடம் கையளிக்கவுள்ளேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துகொண்ட நாள் முதல் அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டதிற்கு அமைவாக நடந்துகொண்டுள்ளேன். இந்தக் காலப்பகுதியில் தனிப்பட்டே சுதந்திரமாகச் செயறபட்டுள்ளேன்.

அத்துடன் யாழ். மாநகர சபையிலும் தனித்துச் செயற்பட்டுள்ளேன். பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை. பொய்ப்பரப்புரைக்குத் துணைபோகவில்லை. சுதநதிரக் கட்சியில் அங்கத்துவம் பெற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளேன். இதற்கு அமைவாக யாழ். மாநகரச சபை உறுப்பினர் பதவியை இன்று இராஜினாமாச் செய்து யாழ். மாநகர முதல்வரிடம் கடிதத்தைக் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இன்னொரு கட்சி அல்லது நபரிடம் ஆலோசனை பெற்றுச் செயற்படமாட்டேன். சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்றே செயற்படுவேன் எமது பிரச்சினைகளுக்கு வெளிநாடுகளின் மூலம் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்துடன் பேசியே எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (பா)

### தெரிவுக்குழுவில்...

இருதரப்புக்கும் இடையே ஒரு உடன்பாடு எட்டப்பட்டு அதன் பின்னர் அந்த அம்சங்களை தேர்வுக் குழுவுக்கு எடுத்துச் செல்வது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அரசு அதை மீறிச் செயல்படுவது எங்களுக்கு ஏற்புடையதல்ல.

வட மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ள சூழலில், 13 ஆவது சட்டத் திருத்தத்தையும் மாகாண சபை முறையையும் முற்றாக அழிக்க அல்லது வலுவைக் குறைக்க அரசு தற்போது நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்க நாடாளுமன்றத் தேர்வுக் குழுவின் மூலம் அரசு ஒரு முன்னெடுப்பைச் செய்யும் நிலையில், அப்படியான ஒரு செயற்பாட்டில் ஈடுபட முடியாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகிறது.

இந்திய அரசு, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகத்துக்கு 13 ஆவது சட்டத் திருத்தத்தில் அளிக்கப்பட்டுள்ள அம்சங்களை முற்றாக நிறைவேற்றி அதற்கு மேலாகவும் அதிகாரப் பரவலைச் செய்வோம் என்று கொடுத்த உறுதிமொழியையும் மீறி, இப்போது அதற்கு எதிரான விதத்தில் அரசு செயற்பட்டு வருகிறது.

அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்வுக் குழுவையையும் அப்படியான நடவடிக்கைக்கு ஒரு களமாக பயன்படுத்த அரசு எண்ணியுள்ள நிலையில், எங்களால் அந்தக் குழுவில் அங்கம் வகிக்க முடியாது.

அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஆதரவான கருத்துக்களை அரசுக்குள்ளேயே கொண்டுள்ள அமைச்சர்கள் திஸ்ஸ விதாரண, ரவூப் ஹக்கீம் மற்றும் ராஜித சேனாரட்ன ஆகியோர் இந்தக் குழுவில் உள்வாங்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டும் சுமந்திரன், அந்தக் குழுவிலும் பெரும்பான்மையினரின் ஆதிக்கமே கூடுதலாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

# இலங்கை குறித்த கொள்கையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்

### இந்திய ஆய்வாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பிலான கொள்கையில் சரியான தீர்மானத்தை இந்தியா மேற்கொள்ளும் தருணம் தற்போது ஏற்பட்டுள்ளதாக இந்திய அரசியல் ஆய்வாளர் எம்.கே.நாராயணசாமி குறிப்பிட்டுள்ளார்.

தமிழகம் வெலிங்டனில் பயிற்சி பெற்று வந்த இலங்கைப் படையினர் இருவர் அங்கிருந்து வெளியேறியமையானது, இலங்கை, புதுடில்லி, தமிழகத்துக்கு இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எந்த ஒரு சுயமரியாதை கொண்ட நாடும் தமது நாட்டு வீரர்கள் வேறு நாட்டுக்கு பயிற்சிக்காக சென்று உள்ளூர் அரசியலுக்காக திருப்பியனுப்பப்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டாது.

தமிழகத்தின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் தரப்பில் உள்ள இலங்கை எதிர்ப்புக்குழுக்கள் இலங்கையர்கள் மீது தாக்குதல் நடத்தின. இந்தநிலைமை தொடருமானால் அது இலங்கையில் இந்திய எதிர்ப்புக்கே வழியை ஏற்படுத்தும்.

இந்தநிலையில், இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கைக்கு இந்தியா ஆலோசனை கூற வேண்டுமாயின் உரிய முறையில் இலங்கையுடன் தொடர்புகள் பேணப்படவேண்டும்.

அதனை விடுத்து தமிழகத்தின் உணர்வுகளுக்கு மாத்திரம் மதிப்பளிக்கப்படுதல் ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கையல்ல.

எனவே, மன்மோகன்சிங்கின் அரசாங்கம், தற்போதைய நிலையில் தமிழகத்தின் உணர்வுகளை மாத்திரம் கணக்கில் கொள்ளாமல் தேசத்தின் நலன் கருதி இலங்கை விடயத்தில் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும்.

இதேவேளை தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கையும் தப்பிச்செல்லக்கூடிய முறைகளை கைவிடவேண்டும் என்றும் நாராயணசாமி கேட்டுள்ளார்.

## கடற்படையினர் காப்பாற்றிய இந்திய மீனவர்கள் ஒப்படைப்பு

மீன்பிடிக்கச் சென்ற வேளை படகு பழுதானதையடுத்து இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களும் நேற்றைய தினம் இந்திய கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 26 ஆம் திகதி கடலுக்குச்சென்ற வேளை படகு பழுதடைந்ததால் கடலில் தத்தளித்த ஜக்சன், ஜஸ்டின் உட்பட நான்கு மீனவர்களை காப்பாற்றிய இலங்கைக் கடற்படையினர் அவர்களை இலங்கைக்கு கெண்டு சென்றனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்த நான்கு மீனவர்களும் இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கபபட்டனர்.

## புலிகளி மீதான தடை செல்லுமென அறிவிப்பு

### வைகோவின் மனுவும் தள்ளுபடி

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை 2010 ஆம் ஆண்டு நீடிக்கப்பட்டது செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் 1991 ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டது. அதன் பின்னர், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அத்தடை நீடிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 2010 ஆம் ஆண்டு மே மாதம் தடையை நீடித்து மத்திய உள்துறை அமைச்சகம் பிறப்பித்த உத்தரவு செல்லும் என்று, அது குறித்து விசாரிக்கவென நியமிக்கப்பட்ட நீதிபதி விக்ரம்ஜித் சென் தலைமையிலான தீர்ப்பாயம் கூறியது.

ஆனால், அந்த முடிவினை எதிர்த்து சிறைவாசிகள் உரிமை மையத்தின் இயக்குநர் புகழேந்தி மற்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

அவர்களின் மனுக்கள் மீதான விசாரணை கடந்த ஆண்டு மே மாதம் முடிந்து, ஒத்திவைக்கப்பட்ட தீர்ப்பு நேற்று சென்னையில் வெளியிடப்பட்டது.

நீதிபதிகள் எலிபி தர்மாராவ், எம். வேணுகோபால் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச், விடுதலைப் புலிகள் இந்தியாவில் பல கொடிய செயல்களைப் புரிந்திருக்கின்றனர். அவர்களது தமிழீழத்தில் இந்தியாவில் சில பகுதிகளும் அடங்கும். எனவே தடை நீட்டிப்பு செல்லும் என்று தீர்ப்பளித்திருக்கிறது.

எப்படியும் தீர்ப்பாயம் புதுடில்லியில் நிலை கொண்டிருந்ததால் அதன் முடிவின் மீது தீர்ப்பளிக்கும் உரிமை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு இல்லை எனக்கூறி, தடை நீடிப்பு செல்லும் என்ற தீர்ப்பிற்கெதிரான மனுக்களை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

இதனிடையே 2012 இல் மீண்டுமொருமுறை விடுதலைப்புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டிருக்கிறது, அதனை எதிர்த்தும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயண எச்சரிக்கை குறித்து அமெரிக்கத் தூதுவரிடம் விளக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜே சிசனிடம் விளக்கம் கோரப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அமெரிக்காவினால் அண்மையில் வெளியிடப்பட்ட பயண எச்சரிக்கை தொடர்பில் விளக்கம் கோரப்படவுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுப் பிரஜைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுவதாகவும் குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்த விடயம் குறித்து அமெரிக்காவின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள வேண்டியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. விரைவில் அமெரிக்கத் தூதுவரை அழைத்து விளக்கம் கோரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகள் இணைவது அவசியம்

### வலியுறுத்துகிறார் அமைச்சர் டியூ

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்து எதிர்க்கட்சிகளும் பங்கேற்பது அவசியமானதென சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகள் பங்குபற்றவில்லையாயின் அது அரச நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்று மட்டுமே அடையாளம் காணப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆணைபெற்றது. வரலாற்றிலும் இது முக்கியத்துவம் வாய்ந்தது. தமது உறுப்பினர்களைப் பிரேரிக்க சகல அரசியல் கட்சிகளும் இதில் பங்கேற்பதை கடமையாகக் கொள்ளவேண்டும்.

பிரச்சினை தீர்வுக்கு முன்னைய ஆட்சியாளர்கள் சிபார்சுகளை முன்வைத்த போதும், எதிர்க்கட்சிகள் அவற்றை வன்மையாக எதிர்த்ததாலும் அவற்றை நடைமுறைப்படுத்த இயலவில்லை.

இதுவே கசப்பான உண்மை.

தேசிய நலனைக் கருத்திற் கொண்டு அவர்கள் அவற்றை எதிர்க்கவில்லை. அரசியல் ஆதாயம் தேடவே அவ்வாறு செய்தனர். இந்த துர்ப்பாக்கிய நிலை. இனியும் தொடரக்கூடாது.

பல்வேறு அரசியற் கட்சிகளின் பங்களிப்போடு இரு வருடங்களாக கலந்தாராய்ந்த சர்வகட்சி மாநாட்டுக் குழுவின் அறிக்கைக்கு ஏற்பவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு செயற்படுமென ஜனாதிபதி கூறியுள்ளார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததால் நடவடிக்கை

13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் மேற்கொள்ளப்படவுளள மாற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் கொண்டுவரவுள்ள யோசனைகளுக்கு ஆதரவாக வாக்களித்த மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காறு நடவடிக்கை எடுப்பதற்கு லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியற் குழு தீர்மானித்துள்ளது.

சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் வத்சலா ஜனாதரி பத்மசிறி மற்றும் வடமேல் மாகாண சபைத் தலைவர் சமன்பிரிய ஹேரத ஆகியோருக்கு எதிராகவே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்களுக்கு எதிராக கட்சி செயற்படத் தீர்மானித்துள்ள நிலையில், குறித்த உறுப்பினர்கள் இருவரும் அந்த யோசனைகளுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக கட்சி குறிப்பிட்டுள்ளது.

கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக செயற்பட்டமை தொடர்பில் குறித்த உறுப்பினர்களிடம் கருத்துக்களை கேட்டறிந்து கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாக லங்கா சமசமாஜக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பிரபாகரனின் கருத்தியலை பிரதிபலிக்கிறது கூட்டமைப்பு

### அமைச்சர் கெஹலிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொண்டிருந்த கருத்தியலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிபலிப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புத் திருத்தங்கள் மற்றும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தாங்கள் ஜனநாயக செயற்பாட்டில் கரிசனை கொள்ளவில்லை என்பதனையும், ஜனநாயக விரோதமாகவே செயற்படுவோம் என்பதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது ஒரு திறந்த மேடையாகும். யார் வந்தாலும் வராவிடினும் அதன் செயற்பாடுகளை அரசாங்கம் திட்டமிட்டபடி ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒருமைப்பாடு செயன்முறைகளை சர்வதேசம் வழங்க வேண்டும்

### - ஜனாதிபதி தெரிவிப்பு

சர்வதேச சமூகமானது தமது ஒருமைப்பாட்டு செயன்முறைகளை இந்தநேரத்தில் இலங்கைக்கு கொடுக்கமுடியும். அவ்வாறு செய்தால் அதுவே சிறந்த உதவியாக இருக்கும் என்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றோம்.

மோதல்களுக்கு பின்னர் எங்களுக்கு சவால்கள் இல்லாமல் இல்லை. ஆகையினால் எங்களுக்கு இன்னும் நேரம் தேவைப்படுகின்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீசெல்ஸுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கைக்கு இந்த சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகம் ஒருமைப்பாட்டு செயன்முறைக்கான உதவிகளை கொடுக்கமுடியும். போருக்குப் பின்னரான சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுக்காமல் இல்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத்தின் மீது ஆர்வம்கொண்ட பிரிவினர் பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியை குறைத்து மதிப்பிடுவதற்கும் சர்வதேச ரீதியில் எங்களை அவமானப்படுத்துவதற்கும் முயற்சிக்கின்றனர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.